# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 7 சனிக்கிழமை (23-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:361


# ஜனாதிபதி கூட்டிய மாநாட்டில் குடாநாட்டு நிலைமை ஆராய்வு




ஈ.பி.டி.பியினரின் யாழ்.தலைமையகமான ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக இரண்டாவது நாளாக நேற்றும் மறியல் போரில் ஈடுபட்டோரில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம். (உட்படம்: ஈ.பி.டி.பியினரின் யாழ்.தலைமையகத்தை பாதுகாக்கும் பொலீஸார்) படம்:பத்மராஜ்

## சகல கட்சிகளையும் இணைத்து செயற்றிட்டம் வகுக்க சிபாரிசு

கொழும்பு,நவம்பர்23

**ஈ.பி.டி.பியினரின் நெடுந்தீவு பிரவேசத்தை அடுத்து குடாநாட்டில் தோன்றியிருக்கும் குழப்பநிலைமை பற்றி கொழும்பில் நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூட்டிய உயர்மட்ட மாநாட்டில் ஆராயப்பட்டிருக்கிறது.**

ஜனாதிபதி கூட்டிய - பாதுகாப்பு தொடர்பான - இந்த மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொண்ட் புருகோவிட், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

குடாநாட்டில் அரசியல் கட்சிகளின் செயற்பாடு, பொதுமக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மாநாட்டில் ஆராயப்பட்டது.

ஈ.பி.டி.பி. கட்சியினர் மீது அரசியல் நெருக்கடி பிரயோகிக்கப்பட்டு வருவதாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அங்கு சுட்டிக்காட்டினார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

அரசியல் கட்சிகளின் செயற்பாடு சட்டம், ஒழுங்கு விடயம் என்பன தொடர்பாக கண்காணிப்புக்குழுவின் நிலைப்பாட்டை அதன் தலைவர் ரொண்ட் புருகோவிட் எடுத்து விளக்கினார்.

அரசும் - புலிகளும் வகுத்துக் கொண்ட போர் நிறுத்த உடன்படிக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஒஸ்லோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் தனிக்குழுவாகவே பங்குபற்றுகிறார்கள்

### நாடாளுமன்றில் அமைச்சர் பீரிஸ் விளக்கம்

கொழும்பு,நவ.23

ஒஸ்லோ மாநாட்டில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் எவரும் அரசின் பிரதிநிதிகளாகக் கலந்துகொள்ளவில்லை என்றும் விடுதலைப் புலிகள் தனியொரு குழுவாகவே கலந்து கொள்கின்றனர் என்றும் அரசியல் விவகார, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஒஸ்லோ மாநாட்டைப் பற்றியும் அதில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்வது பற்றியும் எதிர்க் கட்சியினர் பீதியடைய வேண்டியதில்லை எனவும் குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ் மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன உண்மைக்கு மாறாக விடயங்களைத் திரித்துக் கூறுகிறார் எனவும் சொன்னார்.

தனது அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர், வடக்கு - கிழக்கில் வாழ்பவர்களும் நமது நாட்டின் மக்கள் தான் என்பதை எதிர்க்கட்சியினர் ஏற்றுக்கொள்ள மறுப்பது ஏன் என்பது புரியவில்லை எனவும் சொன்னார்.

(ஓ)

## ஈ.பி.டி.பி. தலைமையகம் முன் நேற்றும் எதிர்ப்பு நடவடிக்கை!

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ். நகரில் உள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமையகம் முன்பாக நேற்று இரண்டாவது நாளாகவும் எதிர்ப்பு நடவடிக்கை இடம்பெற்றது.

நெடுந்தீவில் தரையிறக்கப்பட்ட ஈ.பி.டி.பியினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று கோரி நெடுந்தீவு மக்கள் நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் -

குடாநாட்டில் இருந்து ஈ.பி.டி.பியினர் அனைவரும் டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் வெளியேறிவிட வேண்டும் என்று கோரியும் -

இந்த எதிர்ப்பு நடவடிக்கை இடம் பெற்றது.

உயர் தொழில்நுட்ப நிறுவனம், யாழ்.பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மாணவர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் நேற்றும் எதிர்ப்பு நடவடிக்கையில் பங்குபற்றினர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### இரவு வேளையில் வீடு புகுந்து தாக்குதல்

## ஈ.பி.டி.பி. உறுப்பினருக்கும் மனைவிக்கும் வாள் வெட்டு!

வடமராட்சி,நவ.23

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) பருத்தித்துறைப் பிரதேச உறுப்பினர் அரபாத்தும் அவரது மனைவியும் வாள் வெட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

புலோலிப் பகுதியில் உள்ள இவர்களது இல்லத்தினுள் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில சுமார் 10 பேரடங்கிய - கும்பல் ஒன்று வாள்கள், பொல்லுகள் சகிதம் திடீரெனப் புகுந்து அங்கிருந்தோரை தாறுமாறாகத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினருக்கு வலது கையிலும் அவரது மனைவிக்கு தலையிலும் வெட்டுக் காயங்கள் ஏற்பட்டன. சம்பவத்தின்போது வீட்டிலிருந்த அவரது தந்தையாரும் தாக்கப்பட்டிருக்கிறார்.

வாள்வெட்டுக்கு இலக்கான ஈ.பி.

(12ஆம் பக்கம் பார்க்க)

### போராடும் மக்களுக்கு வழங்குவதற்காக

## உணவுடன் சென்ற மாணவர்குழு நெடுந்தீவு செல்ல அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம்,நவ.23

நெடுந்தீவில் இருந்து ஈ.பி.டி.பியினரை வெளியேற்றக்கோரி தொடர் போராட்டம் நடத்திவரும் மக்களுக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் சென்ற மாணவர்குழு நெடுந்தீவு செல்ல அனுமதி மறுக்கப்பட்டதால் திரும்பிவந்தனர்.

விரிவுரையாளர் ஒருவர் தலைமையில் சென்ற மாணவர்கள் நெடுந்தீவு செல்ல கடற்படையினர் அனுமதி மறுத்ததாகவும் - இதனைத் தொடர்ந்து மாணவர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் பல அலைக்கழிவுகளை எதிர்நோக்கிய பின்னர் மாணவர்குழு நெடுந்தீவு செல்ல முடியாது திரும்பினர்.

உணவுப் பொருள்களுடன் அவர்கள் மீண்டும் இன்று நெடுந்தீவு புறப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. *(படம்:- இரண்டாம் பக்கத்தில்)*

(ஒ-4)

## புத்தளம் வன்செயல்களைக் கண்டித்து நகரில் முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம்,நவ.23

புத்தளத்தில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைகளைக் கண்டித்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் நேற்று நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து சென்று புத்தளம் ஸ்ரீமாபுரத்தில் குடியேறி அகதிமுகாமகளில் வசிக்கும் முஸ்லிம்கள் மீதும், அப்பகுதியில் அமைந்திருந்த பள்ளிவாசல் மீதும் குண்டர்கள் கடந்த புதன்கிழமை தாக்குதல் நடத்தியுள்ளனர். அத்தோடு புத்தளம் பகுதியில் பயணிகள்பஸ் ஒன்றும் மறிக்கப்பட்டு அதிலிருந்து முஸ்லிம்கள் மட்டும் தாககப்கட்டுள்ளனர்.

இச்சம்பவங்களைக் கண்டித்து தங்கள் ஆட்சேபத்தை வெளிப்படுத்துவதற்காகவே நேற்று யாழ்.முஸ்லிம்கள ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். முஸ்லிம் தெரு பகுதியில் குடியமர்ந்துள்ள சுமார் 50 முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த நூறு பேர் வரை பேரணியாகச் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் ஜும் ஆ தொழுகையை முடித்துக்

(12ஆம் பக்கம் பார்க்க)

### விளையாட்டால் நேர்ந்த விபரீதம்!

யாழ்ப்பாணம்,நவ.23

நிலத்தில் கிடந்த 'வயர்' ஒன்றை விளையாட்டாகப் பிடித்திழுத்த சிறுவன் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த பொறிவெடி வெடித்ததில் படுகாயமடைந்தான்.

கொடிகாமம் இயற்றாலைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 4மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த ஆர். தேவகரன் (வயது 9) என்ற சிறுவனே படுகாய மடைந்தான் இச்சிறுவன் யாழ்

(12ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.நகரில் நேற்று நடந்த முஸ்லிம் மக்களின் பேரணியில் ஒரு காட்சி (படம்:வசந்தன்)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### நெடுந்தீவில் அரசியல் பணியில் ஈடுபடுவதாயின்

# கண்காணிப்புக் குழுவின் ஆலோசனையை ஈ.பி.டி.பியினர் அனுசரித்து நடக்கவேண்டும்!

### கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரதமரிடம் வலியுறுத்து

கொழும்பு,நவ.23

நெடுந்தீவில் போய் இறங்கியிருக்கும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் முதலில் அங்கிருந்து வெளியேறி சுமூக நிலைமை ஏற்பட இடமளிக்க வேண்டும். எதிர்காலத்தில் அங்கு தங்கள் அரசியல் பணிகளைத் தொடர்வதாயின் கண்காணிப்புக்குழுவின் ஆலோசனைகளை அனுசரித்து அதன்படி அங்கு போய் பணிபுரிய வேண்டும்.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்டவாறு பிரதமரிடம் வற்புறுத்தியிருக்கின்றனர்.

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினர் தரையிறக்கப்பட்ட விவகாரம் குறித்து ஆராய்வதற்காக நாடாளுமன்றத்தில் உள்ள பிரதமரின் அலுவலகத்தில் நேற்று மாலை 4 மணிக்கு சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராசா, ஜி.ஜி.கஜேந்திரகுமார், துரைரத்தினசிங்கம், ஆர்.குகனேஸ்வரன், கிருஸ்ணபிள்ளை ஆகியோரும் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரான டக்ளஸ் தேவானந்தா, புளொட் தலைவர் த.சித்தார்த்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரிடம் தெரிவித்ததாவது:-

குடாநாட்டு மக்கள் தற்போது மேற்கொண்டிருக்கும் எதிர்ப்புப் போராட்டங்களுக்கு ஈ.பி.டி.பியினரின் கடந்த கால செயற்பாடுகளும், அவர்களது நடவடிக்கைகளும்தான் காரணமாகும். அந்த காலங்களில் அந்த அமைப்பின் செயல்களால் மக்கள் அனுபவித்த துன்புறுத்தல்களை இன்றும் அவர்கள் மறந்துவிடவில்லை. தீவகத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக இருந்தால் அதற்கு ஒரு நடைமுறை இருக்கின்றது. அதை விடுத்து இரவு நேரத்தில் படையினரின் பாதுகாப்புடன் போய் ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவில் தரையிறங்கியுள்ளனர். இதனால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். சமாதான சூழ்நிலையில் மக்களுக்கு இத்தகைய அச்சுறுத்தலை அந்த அமைப்பு விடுத்துள்ளது.

நெடுந்தீவில் இருந்து ஈ.பி.டி.பியினர் உடனடியாக வெளியேற வேண்டும். கண்காணிப்புக் குழுவுடன் கலந்து ஆலோசனை செய்து சில விதிமுறைகள், கட்டுப்பாடுகளுடன் அங்கு சென்று தமது பணிகளை அவர்கள் மேற்கொள்ளலாம்.

நெடுந்தீவுப் பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த சமயம் ஏனைய அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளை ஈ.பி.டி.பியினர் அங்கு தடுத்துவந்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் பலர் அங்கு வைத்து தாக்கப்பட்டதையும் நினைவுபடுத்த விரும்புகிறோம் - என்று கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரதமரிடம் தெரிவித்தனர்.

நெடுந்தீவில் வசிக்கும் மக்கள் ஈ.பி.டி.பியின் அரசியல் பணிகளை ஆதரிக்கின்றனர். புலிகளால் தூண்டப்பட்ட சிலரே அங்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர் - என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பிரதமரிடம் தெரிவித்தார்.

நெடுந்தீவை விட்டு வெளியேற வேண்டும் என்று கூட்டமைப்பு எம்.பிக்கள் விடுத்த கோரிக்கையை அவர் அடியோடு நிராகரித்தார்.

இதேவேளை -

பிரதமருடன் நேற்று நடந்த சந்திப்பு தொடர்பாக ஈ.பி.டி.பி. விடுத்த ஓர் அறிக்கையில் -

மாற்று அரசியல் சக்திகளின் சுதந்திரமான செயற்பாடு உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும் என்பதை நேற்றைய சந்திப்பில் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். இதனை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எவ்வாறு நடைமுறைக்கு கொண்டு வருவது என்பது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அனுசரணையுடன் ஒரு திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்று அங்கு முடிவு செய்யப்பட்டது. ஒஸ்லோ மாநாட்டின் பின்னர் பிரதமர் மீண்டும் நாடு திரும்பியதும் இது சம்பந்தமாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க உப குழு ஒன்று ஏற்படுத்தப்படும் எனவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-3-12)

# அரசியல் ரீதியாக எம்மை அடக்கி அடிபணிய வைக்க இடமளியோம்!

### நெடுந்தீவு தொடர்பான நிலையை விளக்குகிறார் டக்ளஸ்

கொழும்பு,நவ.23



அநியாயமான கோரிக்கைகளுக்கு மக்கள் ஒருபோதும் ஆதரவு தெரிவிக்கமாட்டார்கள் என்பதுடன், ஜனநாயக அரசியலில் சகிப்புத் தன்மையின் அவசியத்தைப் புத்திஜீவிகளும் பொதுமக்களும் நன்கு உணர்ந்துள்ளனர். நெடுந்தீவுப் பகுதியில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காகவும் நெடுந்தீவு பிரதேச சபையின் நிர்வாகப் பணிகளை முன்னெடுப்பதற்காகவும் சென்ற எமது கட்சித் தோழர்கள் மற்றும் உறுப்பினர்கள் சந்தித்த சம்பவங்களின் பிரதிபலிப்பு இதனையே உணர்த்துகிறது.

இவ்வாறு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

நெடுந்தீவில் தரையிறங்கிய எம்மவர்களை மண்ணுக்கும் மக்களுக்கும் அந்நியமான ஆக்கிரமிப்பாளர்கள் போலவே சித்திரித்துக்காட்ட தமிழ்ப் பத்திரிகைகள் சில முயன்றுள்ளன. இது எமக்கு மிகுந்த கவலையைத் தருவதாகும்.

கடற்படை மற்றும் பொலீஸ் சீருடையில் மறைந்து திரிவதாகவும், ஆயுதமேந்தி அட்டகாசம் புரியும் ஒரு கும்பல் போலவும் புலிகள் எம்மைச் சித்திரிக்க முற்பட்டிருந்தனர். இது மிகவும் கண்டனத்திற்குரியதாகும்.

நெடுந்தீவில் தற்போதும் நாங்கள் நிலைகொண்டிருக்கின்றோம் என்பதுடன் எந்த வேளையிலும் வெறும் பலாத்காரமாக வெளியேற்ற இடமளிக்கமாட்டோம். இதனை இந்தச் சந்தர்ப்பத்தில் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகிறோம். ஏனெனில், முன்னர் பல்வேறு தரப்புகளை ஆயுதமுனையில் அச்சுறுத்தி அடக்கியதைப் போல புலிகள் தற்போது அரசியல் ரீதியாக எம்மை அடக்கி அடிபணிய வைக்க நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் ஜனநாயக அரசியலில் சகிப்புத் தன்மையும் பொது நலன்நோக்கிய செயற்பாடும் மிகவும் அவசியமானதாகும். ஆனால், மாற்றுக் கருத்துள்ளவர்களின் இருப்பைக் கூடச் சீரணிக்க முடியாத வக்கிரத் தன்மையும் புலி ஆட்சியை நிறுவும் குறுகிய மனப்பாங்கும்தான் நெடுந்தீவில் தோன்றிய பதற்ற நிலைக்கு அடிப்படைக் காரணமாகும்.

- இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

### மக்களுக்கு பீதியை ஏற்படுத்தும் வகையில்

# நெடுந்தீவில் படைகளை குவிப்பது ஒரு படை நடவடிக்கையை ஒத்தது!

### உடன்படிக்கை மீறல் என்கிறார் இளம்பரிதி

யாழ்ப்பாணம்,நவ.23



நெடுந்தீவில் பெரும் எண்ணிக்கையான பொலீஸாரும் கடற்படையினரும் குவிக்கப்பட்டிருப்பது ஒரு படை நடவடிக்கையை ஒத்தது.

- விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி இவ்வாறு ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்.

கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டத் தலைவருக்கு இளம்பரிதி அனுப்பிய கடிதம் வருமாறு:-

நெடுந்தீவில் கடற்படையினரதும் பொலீஸாரினதும் ஈ.பி.டி.பி. குழுவினரதும் நடவடிக்கைகள் தொடர்பாக ஏற்கனவே தங்களின் கவனத்திற்கு தெரியப்படுத்தியிருந்தோம்.

அது தொடர்பாகப் பின்வரும் விடயங்களைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம்.

☆பெருந்தொகையான பொலீஸாரையும் கடற்படையினரையும் குவித்திருப்பது ஒரு படைநடவடிக்கை போன்றது. இது மக்களுக்குப் பீதியையும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்துவதாகும்

☆கடந்த ஒருவார காலமாகக் கடற்படையினர், ஈ.பி.டி.பி. குழுவினருக்குப் பாதுகாப்பு வழங்குகின்றோம் என்ற போர்வையில் தொடர்ந்து நிலைகொண்டுள்ளனர். இது யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி ஒரு பாரிய மீறலாகும். எனவே உடன் கடற்படையினரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவும்.

☆பொலீஸாரும் கடற்படையினரும் கூட்டாகச் சேர்ந்து ஈ.பி.டி.பி. குழுவினருக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகப் பொதுச்சந்தை, பிரதேச சபை, பிரதேச செயலகம், தபால் நிலையம் என்பவற்றையும் பொதுமக்களின் பத்து வீடுகளையும் தெருக்களையும் ஆக்கிரமித்துக்கொண்டிருப்பது மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிப்பதுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையின் சரத்து 2 உபபிரிவு 2.5 இனபடி யுத்தநிறுத்த மீறலுமாகும்.

எனவே, இப்பிரச்சினையை தீர்த்து மக்களின் இயல்புநிலையை திரும்பவும் கொண்டுவருவதற்கு ஜனநாயக முறையில் தொடர்ச்சியாக போராடும் மக்களின் கோரிக்கைக்கு மதிப்பளித்து பொருத்தமான நடவடிக்கைகளை உடன் விரைந்து மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(ஜ)




நெடுந்தீவு மக்களுக்கு வழங்கவென உணவுப் பொருள்களை நேற்று எடுத்துச் சென்ற யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பல அலைக்கழிவுகளின் பின்னர் நெடுந்தீவு செல்ல முடியாது திரும்பினர்.

### நெடுந்தீவில் தங்கியிருப்போமென

# ஈ.பி.டி.பியினர் அடம்பிடித்தால் மீனவர்களும் போராட நேரிடும்!

### சமாசத் தலைவர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.23

ஜனநாயகம் என்ற போர்வையில் இரவோடு இரவாக நெடுந்தீவில் பிரவேசித்துள்ள ஈ.பி.டி.பியினர் உடனடியாக அங்கிருந்து வெளியேறி அங்குள்ள மக்களை இயல்பு வாழ்க்கைக்கு அனுமதிக்க வேண்டும்.

இல்லையேல் நெடுந்தீவு மக்களுக்கு ஆதரவாக குடாநாட்டு மீனவர்கள் போராட்டத்தில் குதிப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இவ்வாறு தெரிவித்தார், வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம்.

நேற்றுக் காலை நெடுந்தீவைச் சேர்ந்த மீனவர்கள் சிலர், தொலைபேசி மூலம் தன்னுடன் தொடர்பு கொண்டு உரையாடியதாக அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:-

தாம் அனைவரும் ஒன்று திரண்டு ஈ.பி.டி.பியினருக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டிருப்பதாகவும் - இதனால் மீன்பிடித்தொழில், சந்தை உட்பட அனைத்து அன்றாடப் பணிகளும் தடைப்பட்டுள்ளதாகவும் - நெடுந்தீவு மக்கள் தொலைபேசியில் பேசியபோது குறிப்பிட்டனர். தமது போராட்டத்துக்கு ஆதரவு தருமாறு அவர்கள் அப்போது கோரினர்.

இது தொடர்பாக ஆராயும் பொருட்டு ஒன்றுகூடிய சமாசப்பிரதி நிதிகள், நெடுந்தீவு மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தீர்மானித்துள்ளனர்.

இதன்படி சமாதானச் சூழலுக்குக் குந்தகம் ஏற்படும் வகையில் ஈ.பி.டி.பியினர் தொடர்ந்தும் அங்கு தங்கியிருப்பார்களானால், அவர்களை வெளியேறக்கோரி நெடுந்தீவு மக்களுக்கு ஆதரவாக குடாநாட்டு மீனவர்களும் போராட்டத்தில் குதிக்க நேரிடும்.

இவ்வாறு சமாசத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-9)

# உலக அழகிப் போட்டியால் வந்த ஆபத்து நைஜீரியாவின் வடக்கு நகரத்தில் கலவரம்

## 100 பேருக்கு மேல் உயிரிழப்பு; பலர் காயம்

அபுஜா,நவ.23

நைஜீரியாவில் நடைபெற்றுவரும் உலக அழகிப் போட்டி தொடர்பான சர்ச்சையால் எழுந்த கலவரத்தில் அங்கு 100இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு நைஜீரிய நகரான கடுனாவிலேயே இந்தக் கலவரங்கள் இடம்பெற்றுள்ளன. உயிரிழந்தவர்களைத் தவிர மேலும் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளதாகவும் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் கலவரத்தை அடுத்து அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நகர வீதிகள் அனைத்திலும் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உள்ளூர் பத்திரிகை ஒன்றில் உலக அழகிப் போட்டிக்கு ஆதரவாக இஸ்லாமிய மதகுரு ஒருவர் எழுதிய கட்டுரையைத் தொடர்ந்தே இந்தக் கலவரங்கள் ஆரம்பமாகின. நூற்றுக்கணக்கான இஸ்லாமிய இளைஞர்கள் வீதிகளில்கூடி கடந்த இரு நாள்களாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



உலக அழகிப் போட்டியில் கலந்துகொண்டோரில் சிலர்

தேவாலயங்களும் கிறிஸ்தவர்களின் வீடுகளும் தாக்கப்பட்டன. வீதிகளில் டயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. உள்ளூர் தயாரிப்பு ஆயுதங்களைக் கொண்டு சில கட்டடங்களும் தாக்கப்பட்டன. வன்முறைகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் உடல்கள் வீதிகளில் சிதறிக்கிடப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடுனாவில் உள்ள நான்கு வைத்தியசாலைகளில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பல மாவட்டங்களில் இருந்தும் வந்த காயக்காரர்களால் நிறைந்துள்ளன.

அழகிப் போட்டியை ஆதரித்து எழுதிய பத்திரிகைக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூர் மசூதி ஒன்று கோரிக்கை விடுத்துள்ளது.

கடுனா, நைஜீரியாவின் கலவரங்கள் நிறைந்த நகரங்களில் ஒன்று. இங்கு இஸ்லாமியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் அடிக்கடி வன்முறைகள் இடம்பெறுவது வழமை. கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் இவ்வாறான கலவரங்களில் சிக்கி 2ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இந்த நகரத்தில் இறந்துள்ளனர்.

இந்த நிலையில் நைஜீரியாவில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் உலக அழகிப் போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆரம்பம் முதலே இஸ்லாமியக் குழுக்கள் இதனைக் கடுமையாக எதிர்த்து வந்தன. ஆனால், அவற்றைப் பொருட்படுத்தாமல் நாட்டின் தென்பகுதியில் - கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் பகுதி - அழகிப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

உலக அழகிப் போட்டிகள் தமது மதத்தை இழிவுபடுத்துவதாகவும் தமது பெண்களின் கலாசாரத்தை சிதைப்பதாகவும் அடிப்படைவாதிகள் கூறுகின்றனர். அதுவும் இஸ்லாமியர்களின் புனித மாதமான ரம்ழான் மாதத்தில் இந்தப் போட்டி நடத்தப்படுவது அவர்களை மிகவும் ஆத்திரமடைய வைத்துள்ளது.

இதன் விளைவே கடுனாவில் ஏற்பட்ட கலவரம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத்தனை உயிரிழப்புக்கள் ஏற்பட்டபோதும் திட்டமிட்டபடி உலக அழகிப் போட்டியின் இறுதிப் போட்டி டிசெம்பர் 7ஆம் திகதி தலைநகர் அபுஜாவில் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம)



முன்னர் நடந்த கலவரங்களின் போது எடுக்கப்பட்ட படம்.

# பெத்தலகேம் நகரத்துக்குள் இஸ்ரேலியப் படை புகுந்தது!

மேற்குக்கரையில் பலஸ்தீனக் கட்டுப்பாட்டில் உள்ள பெத்தலகேம் நகரினுள் இஸ்ரேலியப் படைகள் நேற்று நுழைந்து தமது இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

ஜெருசலேமில் பலஸ்தீனத் தற்கொலையாளி தாக்குதல் நடத்தி 11 பேரைக் கொன்ற சம்பவம் இடம்பெற்ற ஒருநாளின் பின்னர் இந்தத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெத்தலகேம் நகரில் உள்ள ஒவ்வொரு வீடுகளிலும் புகுந்து இஸ்ரேலிய இராணுவம் சோதனை நடத்தி வருவதாக பலஸ்தீன வட்டாரங்களும் உள்ளூர் மக்களும் தெரிவிக்கின்றனர். இஸ்ரேலில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதல்களுடன் தொடர்புடைய பலஸ்தீன ஆயுததாரிகள் 30 பேரைத் தேடியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இஸ்ரேல் இராணுவம் கூறுகின்றது.

நேற்று மாலைக்கிடையில் இஸ்ரேலியப் படையினரால் 9 பலஸ்தீனர்கள் கைதுசெய்யப்பட்டதாக பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

பெத்தலகேமில் உள்ள அகதி முகாம் ஒன்றை இஸ்ரேலியப் படைகள் சுற்றிவளைத்துள்ளன. அதன் அருகில் உள்ள நேட்டிவிற்றி தேவாலயத்தையும் அதன் முகாமையாளர் தங்கும் பகுதியையும் கூட இஸ்ரேலியத் துருப்புக்கள் சுற்றிவளைத்து அதற்குள் எவரும் செல்வதற்குத் தடைவிதித்துள்ளன.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இஸ்ரேலியப் படையினர் இத்தகைய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்தபோது நேட்டிவிற்றி தேவாலயத்துக்குள் ஆயுததாரிகளும் பொதுமக்களும் பதுங்கிக்கொண்டனர். அதனை அடுத்து தேவாலயத்தைச் சுற்றிவளைத்த இஸ்ரேலியத் துருப்புக்கள் அங்கிருந்த ஆயுததாரிகளை ஒப்படைத்தால் தவிர உள்ளே சிக்கிக் கொண்டுள்ள பொதுமக்களை வெளியேற அனுமதிக்க மறுத்தது.

அதன் பின்னர் ஆயுததாரிகளை வேறு அரபு நாடுகளில் வைத்து விசாரிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே தேவாலயம் மீதான முற்றுகையை இஸ்ரேல் தளர்த்தியது.

இதனால், இம்முறை ஆலயத்துக்குள் எவரும் சென்று பதுங்கிக் கொள்வதற்கு முன்பாகவே இஸ்ரேலியப் படைகள் அதனைத் தடை செய்துவிட்டன. (ம)



நேட்டிவிற்றி தேவாலயத்தை முற்றுகையிட்டுள்ள இஸ்ரேலிய டாங்கி

# தற்கொலைத் தாக்குதல்களை தொடரக் கோருகிறது ஹமாஸ்

டோஹா,நவ.23

இஸ்ரேலியர்கள் மீதான தற்கொலைத் தாக்குதல்களை பலஸ்தீனர்கள் நிறுத்தக்கூடாது தொடர்ந்து அவற்றை மேற்கொள்ளவேண்டும். அதன்மூலமே இஸ்ரேலை அச்சுறுத்த முடியும்.

- இவ்வாறு இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பான ஹமாஸின் முக்கிய உறுப்பினர் ஒருவர் காஸா பகுதியில் இருந்து அல்ஜெஸீரா தொலைக்காட்சிக்கு தொலைபேசி மூலம் வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மேற்கு ஜெருசலேமில் வியாழக்கிழமை காலையில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலை ஹமாஸ் இயக்கம் நடத்தவில்லை என்று தெரிவித்த அவர், இத்தகைய தாக்குதல்களை நடத்த பலஸ்தீனர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என்றார்.

இஸ்ரேலிடம் இருந்து விடுதலை பெறவேண்டும் எனின் பலஸ்தீனர்களுக்கு இருக்கும் ஒரே வழி அதுதான் என்றும் அவர் சொன்னார். (ம)

# லெபனானில் அமெரிக்கப் பெண் சுட்டுக்கொலை!

கெய்ரோ,நவ.23

தெற்கு லெபனானிய நகரமான சிடோனில் அமெரிக்கப் பெண் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

லெபனானில் உள்ள அமெரிக்க மிஷனறியைச் சேர்ந்த போனி வித்ஹெரல் என்ற பெண்ணே கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் மருத்துவத் தாதியாகப் பணியாற்றி வந்தார். அவர் பணியாற்றிய மருத்துவ நிலையத்துக்கு வந்த அடையாளம் தெரியாத நபர் ஒருவர் கதவைத் தட்டியுள்ளார். அதனைத் திறந்த வித்ஹெரல்லை சுட்டுவிட்டுத் தப்பிவிட்டார் என்று பொலிஸார் கூறுகின்றனர். அவரது தலையில் ஒரு துப்பாக்கிச் சூடு மட்டுமே காணப்பட்டது.

லெபனானில் அமெரிக்கப் பிரஜை ஒருவர் சுட்டுக்கொல்லப்படுவது இதுவே முதற்றடவையாகும்.

# ரஷ்ய அதிபர் இந்தியாவுக்கு விஜயம்!

மொஸ்கோ,நவ.23

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் எதிர்வரும் டிசெம்பர் 3ஆம் திகதி உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியாவுக்கு செல்லவுள்ளார்.

மொஸ்கோவில் அதிகாரிகள் நேற்று இத்தகவலைத் தெரிவித்தனர்.

சீனத் தலைநகர் பீஜிங்கில் இருந்து டிசெம்பர் 3ஆம் திகதி புதுடில்லி செல்லும் புடின் அடுத்த நாள் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளவுள்ளார். அன்றே பிரதமர் வாஜ்பாயையும் சந்தித்துப் பேசுவார்.

டிசெம்பர் 5ஆம் திகதி புதுடில்லியில் வர்த்தகத் துறையினரைச் சந்திக்கும் அவர் அதன் பின்னர் தாயகம் திரும்புவார் என மொஸ்கோ அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

# பாலித்தீவு குண்டுவெடிப்பு சூத்திரதாரி கைது!

ஜெருசலேம்,நவ.23

இந்தோனேஷியாவின் பாலித் தீவில் ஒக்ரோபர் 12ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தக் குண்டுத் தாக்குதலில் பெருமளவு வெளிநாட்டுப் பிரஜைகள் உட்பட 190இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கைதுசெய்யப்பட்டுள்ள நபர் குண்டுத் தாக்குதலை நடத்தியவர்களுக்கு ஊருக்கு ஆயிரம் அமெரிக்க டொலர்களை அன்பளிப்பாக வழங்கியதாக ஆஸ்திரேலிய பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. (ம)

# பாகிஸ்தானில் புதிய பிரதமர்

இஸ்லாமாபாத்,நவ.23

பாகிஸ்தானின் புதிய பிரதமராக அதிபர் முஷாரப்பின் ஆதரவாளர் மீர் ஜஃபருல்லா கான் ஜமாலி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நீண்டநாள்கள் தொடர்ந்த இழுபறியின் பின்னர் வியாழனன்று பிரதமர் தெரிவுக்கான தேர்தல் நடைபெற்றது. அதில் முஷாரப்பின் ஆதரவுக் கட்சியான பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கின் சார்பில் போட்டியிட்ட ஜமாலி 172 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார்.

இவரை எதிர்த்துப் போட்டியிட்ட இஸ்லாமிய மதவாதக் கூட்டணிக் கட்சியான முத்தாஹிதா மஜ்லிஸ் அமால் வேட்பாளர் மௌலானா பஜ்லுர் ரஹ்மான் 86 வாக்குகளையும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சியின் வேட்பாளர் மஹ்முத் குரேஷி 70 வாக்குகளையும் பெற்றனர்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட மொத்தமுள்ள 328 உறுப்பினர்களும் இந்த வாக்கெடுப்பில் கலந்துகொண்டனர்.


பாகிஸ்தானின் 19ஆவது பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஜமாலி விரைவிலேயே பதவியேற்கவுள்ளார்.

# உலக வர்த்தக மையக் கட்டடம் புதிதாக அமைக்கத் திட்டம் தயார்!

வாஷிங்ரன்,நவ.23

செப்ரெம்பர் 11 தாக்குதலில் தரைமட்டமான நியூயோர்க் வர்த்தக மையக் கட்டடம் அமைந்திருந்த இடத்தில் அதற்குப் பதிலான புதிய கட்டடம் ஒன்று எழுப்பப்படவுள்ளது.

உலக வர்தக மையம் அமைந்திருந்த வளாகத்தில் 697 அடி உயரத்தில் இந்தப் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான வரைபடம் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.



புதிய கட்டடத்தின் மாதிரி அமைப்பு

அகலமான மாடிப் படிகளைக் கொண்ட இந்த மாளிகை கண்ணாடி, இரும்பால் உருவாக்கப்பட உள்ளது. இது 52 மாடிகளைக் கொண்டது. தீ விபத்துக்கள் ஏற்படாத வகையில் இந்தக் கட்டடத்தை அமைப்பதற்குத் தீர்மானித்துள்ளார்கள் என்று நியூயோர்க் நகர மேயர் மைக்கல் தெரிவித்தார்.

கட்டடக்கலை நிபுணர்கள் பலரும் இணைந்து இந்தப் புதிய கட்டடத்தை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் -

அது அடுத்த ஆண்டு இறுதிக்குப் பின்னர் கட்டடம் குறித்த இறுதித் திட்டம் தயாரிக்கப்பட்டுவிடும் என்றும் -

கட்டடத்தை அமைத்துக் கொடுக்கவுள்ளவரி தெரிவித்தார். புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ள இடத்தை லாரி குத்தகைக்கு எடுத்துள்ளார். அந்த இடம் நியூயோர்க் துறைமுகத் துக்குச் சொந்தமானது.

புதிய கட்டடம் 2005ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் கட்டிமுடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)



## கொடிகாமம் நாவலடி
## சிவகாமசுந்தரி அம்பாள் ஆலய
## மணவாளக்கோலவிழா

25.11.2002 திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பூசைகள் நடைபெறும். அம்பாள் அடியார்கள் கலந்துகொண்டு அருள்பெற்றுய்யவும்.

(அன்னதானமும் வழங்கப்படும்.)

தர்மகர்த்தா.

(10861)

EDMEND'S MEDICAL PLASTER

எட்மன்ஸ்

என்.பி.கே.மெடிக்கல் பிளாஸ்ரர்

தலை, பல், காது வலிகள், செங்கண்மாலை, வாதவேதனை, மார்பு, வயிறு, இடுப்பு, முட்டு, கணுக்கால் வலிகள், பித்த வெடிப்பு, இழுப்பு ஆகிய வியாதிகளுக்கு அரச அங்கீகாரம்பெற்ற உடன் நிவாரணி

*யாழ்நகரில் கிடைக்கும் இடங்கள்:*

சிற்றிரேட் சென்ரர், ஆர்.வி.ஜீ.மெடிக்கல்ஸ், நாகவிகாரை - கள்ரீன், சிவசுப்பிரமணியம் மெடிக்கல்ஸ் மற்றும் நெல்லியடியில் திருநடனமுருகன்

*ஏக விநியோகஸ்தர்கள்:*

சிற்றி மெடிக்கல்ஸ், 487, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

டி.ஆர்.இ.குவரட்ண, 30, பாம்குறு எஸ்டேட், வியாங்கொட.

(10863)

உரும்பிராய் லயன்ஸ் கழகமும் அதனால் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளதுமான அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகமும் இணைந்து ஆவரங்கால் கிராம முன்னேற்றச் சங்க அனுசரணையுடன் நடத்தப்படும்

We Serve

▲ இலவச மருத்துவ முகாமும்
▲ இலவச கண்ணாடி பரிசோதித்து வழங்கலும்

*காலம்:* 24.11.2002 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30 மணிமுதல் 1.00 மணிவரை

*இடம்:* ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

*கண் பரிசோதனை:* லயன்.S.M.பெர்னாண்டோ MJF.

*வைத்திய பரிசோதனை:* போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளும், அனுபவம் வாய்ந்த வைத்திய அதிகாரிகளும், மருத்துவ மாணவர்களும் பங்குபற்றுவார்கள்.

*நீரிழிவு பரிசோதனை:* இளைப்பாறிய வை.ஆ.தொ.உ.

அனைவரும் வருக - பயன் பல பெறுக.

ச.ஏகாம்பரநாதன் J.P
*தலைவர்,*
*லயன்ஸ் கழகம், உரும்பிராய்.*

*வைத்திய கலாநிதி சி.இராசலிங்கம்*
*ஒருங்கிணைப்பாளர்,*
*அச்சுவேலி.*

(10858)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச ஸ்தாபகரும் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருமாகிய*

### அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்

அவர்களை இந்நாளில் அவரின் சேவையினை நினைவுகூர்ந்து அவர்களின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

*சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,*
*கோப்பாய் பிராந்தியம்.*

(C/25005)

## 12ஆவது வருட நினைவு நாள்

யாழ்.மாவட்ட முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு ஆணையாளரும்
யாழ்.மாவட்ட சிக்கன கடனுதவு சங்கத்தின் முன்னாள் தலைவரும்,
யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத்தின்
முன்னாள் தலைவருமான

### அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள்

மண்ணகம்: 06.10.1927 விண்ணகம்: 23.11.1990

மக்கள் சேவையே மகேசன் சேவை என்று
மானிடரின் மாண்பையே மனதார மதித்து வாழ்ந்து
மாண்புற்ற மாமனிதனின் ஆன்மசாந்திக்காகவே
மனதார வேண்டுகின்றோம் மன்றுளாடி ஈஸ்வரனை!

யாழ்.சமூக அபிவிருத்தி மன்றப் பணிப்பாளர்,
யாழ்.சமூக அபிவிருத்தி மன்றப் பணியாளர்,
யாழ்.சமூக அபிவிருத்தி மன்றக் கழகங்கள்.

(10745)

## கண்ணீர் அஞ்சலி

எமது மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் முன்னாள் பதிவாளரும், ஓய்வுபெற்ற யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளருமாகிய

### அமரர் அண்ணா இராஜேந்திரம்

அவர்களின் மறைவு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு இந்நீதிமன்றச் சமூகம் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட நீதிபதியும், பதிவாளரும்,
சக உத்தியோகத்தர்களும்,
மாவட்ட நீதிமன்றம் / ஆரம்ப நீதிமன்றம்,
மல்லாகம்.

(10871)

## வடமராட்சியில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர் செயலமர்வு

வடமராட்சி,நவ.23

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் சைவ சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ தி.சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் இந்து சமயத்தில் 'ஆலய வழிபாடும் மனித விழுமியமும்' என்ற தலைப்பிலும், யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளா திருமதி நாச்சியார் செல்வநாயகம் 'சமய விழுமியங்களும் ஆளுமை விருத்தியில் அதன் பங்கும்' என்ற தலைப்பிலும் -

ஓய்வுபெற்ற சிரேஷ்ட போதனாசிரியர் ச.விநாயகமூர்த்தி 'பெரியபுராணம் - சைவசித்தாந்தக் கருவூலம்' என்ற தலைப்பிலும், குடத்தனை அ.த.க. பாடசாலை அதிபர் கே.கே. யோகநாதன் 'இந்துசமய வரலாறும், வாழ்வியலும்' என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றுவார்கள்.

பண்ணிசை வகுப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்த வகுப்புக்கள் நடைபெறும். (எ-173)

## பொதுசன மாதாந்த உதவிப் பணம்

சண்டிலிப்பாய்,நவ.23

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஏ-9 தரைவழிப்பாதை திறக்கப்பட்ட பின்னர் வந்து தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த பொதுசன மாதாந்த உதவிப் பணம்பெறுபவர்களுக்கான கொடுப்பனவு இம்மாதத்திலிருந்து வழங்கப்பட்டு வருகின்றது.

தாம் முன்பு வசித்த பிரதேச செயலர் பணிமனையிலிருந்து உரிய ஆவணங்களைக் கொண்டுவந்து சமர்ப்பித்தவர்களுக்கே இந்த பொதுசன மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாகச் சமூக சேவை உத்தியோகத்தர் செ.யோகானந்தராசா தெரிவித்தார். (எ-135)

## கல்வயல் ஐயனார்ஆலயத்தில் மீண்டும் பூஜை

தென்மராட்சி,நவ.23

சாவகச்சேரி, கல்வயல் ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் ஆலயத்தில் மீண்டும் தினமும் பூஜைகள் நடைபெற்றுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தில் இவ்வருடம் மகரஜோதி உற்சவம் நடத்துவதற்காக கடந்த கார்த்திகைத் தீபத்தினத்தன்று பிராயச்சித்த அபிஷேகம் செய்யப்பட்டு தினமும் பூஜைகள் நடைபெறுவதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ஒ-117)

## ஆறுமுகநாவலர் குருபூசைத்தின பேச்சு போட்டி

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ்.சைவபரிபாலன சபையினர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தும் பேச்சுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை 9மணிமுதல் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு எனமூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டிகளில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்குகொள்கின்றனர் என சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலர் சைவப் புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

## மிதிவெடியில்சிக்கி பசுமாடு காயம்

சண்டிலிப்பாய்,நவ.23

முள்ளானை கனகசபை வித்தியாலயத்திற்கு சமீபமாகவுள்ள காணியொன்றில் மேய்ச்சலுக்குச் சென்ற பசுமாடு ஒன்று மிதிவெடியில் சிக்கிக் காலில் படுகாயமடைந்தது. கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் இச்சம்பவம் நடைபெற்றது.

இம்மாதத்தில் மேலும் இரு மாடுகள் இப்பகுதியில் மிதிவெடியில் சிக்கிப் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

# அரசாங்க அறிவித்தல்

## அரசினர் பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

### 2003ஆம் ஆண்டுக்கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான பின்வரும் பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்குத் தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் நிறுவனங்களும் மேற்படி வழங்குநர்களைப் பதிவுசெய்துகொள்ள விண்ணப்பிக்கலாம்.

01. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
02. கூட்டுறவுத் தொழிலாளர் சங்கங்கள்
03. கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
04. பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள்
05. "சமுர்த்தி" முகாமையாளர்கள்
06. உரிய அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்ட கமக்காரர் ஸ்தாபனங்கள்.

அ. பொருள்கள்

அ. 01. காகிதாதிகள், எழுதுபொருள்கள்
அ. 02. ஈர்க்கில் தடி, தும்புத்தடி, பாய்
அ. 03. பாவனைப் பொருள்கள் (சவர்க்காரம், தீப்பெட்டி, விம், காப்பிக் சவர அலகு முதலியன)
அ. 04. மரத்தளபாடங்கள் வைத்தியசாலைப் பாவனைக்குரியவை. (கட்டில்கள், மேசைகள், கதிரைகள், வாங்குகள் முதலியன)
அ. 05. துணிவகைகள்:- வைத்தியசாலைப் பாவனைக்குரியவை (சீருடைத் துணி, கோடிட்ட துணி, படுக்கை விரிப்பு, துவாய் முதலியன)
அ. 06. உருக்குத் தளபாடங்கள்:- வைத்தியசாலைப் பாவனைக்குரியவை. (அலுமாரிகள், கட்டில்கள், சேலைன் நிலைகள் முதலியன)
அ. 07. கட்டடப் பொருள்கள்:- சிமெந்து பெயின்ற் ஆணிகள், கல், மணல் முதலியன)
அ. 08. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்:- டயர், ரியூப், பற்றறிகள் முதலியன)
அ. 09. அரிந்த பனைமரங்கள், சலாகைகள், அரிந்த ஏனைய மரங்கள். (நிலைகள், யன்னல்கள், கதவுகள், உள் சீற் பொருத்துவதற்குரிய மரங்கள் முதலியன)
அ. 10. நீர் வழங்கு பொருளகள்:- (பிவீசி குழாய்கள் முதலியன)
அ. 11. ஏனைய பாவனைப் பொருளகள்:- (பிளாஸ்ரிக் வாளி, குப்பைக் கூடை, சுவர் மணிக்கூடு முதலியன)
அ. 12. இரும்பு, பித்தளை கன இரும்புப் பொருள்கள்:- (பூட்டுக்கள், வாளி, மண்வெட்டி முதலியன)
அ. 13. சப்பாத்துக்கள், இறப்பர் செருப்புகள்.
அ. 14. றெக்சின், பொலித்தீன் வகைகள்.
அ. 15. மின்சார உபகரணங்கள், மின்சார உதிரிப்பாகங்கள். வயர், மின்குமிழ்கள், கோல்டர் பிளக் முதலியன)
அ. 16. இறப்பர் முத்திரைகள்.
அ. 17. மருந்துவகைகள்.
அ. 18. மெத்தைகள் (சியென்டா), தலையணைகள், நுளம்பு வலைகள் முதலியன)
அ. 19. அலுமினியப் பாத்திரங்கள்:- (சமையலறைக்குரிய பெரிய பாத்திரங்கள் உட்பட)

ஆ. சேவைகள்

ஆ. 01. உருக்குத் தளபாடத்திருத்தம்.
ஆ. 02. மரத்தளபாடத் திருத்தம்.
ஆ. 03. மின்சார இயந்திர, மின்சார உபகரணத் திருத்தம்.
ஆ. 04. (குளிர்சாதனப்பெட்டிகள், தொற்றுநீக்கி இயந்திரம், எக்ஸ் கதிர் இயந்திரம், மோட்டார்கள், மின்பிறப்பாக்கிகள் உயர்வைத்திய உபகரணம் உட்பட)
ஆ. 04. கட்டடத்திருத்தம்.
ஆ. 05. அச்சு வேலைகள் (படிவங்கள் முதலியன)
ஆ. 06. நீர் இறைக்கும் இயந்திரம், கழிவு அகற்றும் இயந்திரம் திருத்தம்.
ஆ. 07. நீர் விநியோகம், மலசலகூட வடிகால் திருத்தம்.
ஆ. 08. போக்குவரத்துச் சேவை (பொருள்கள் ஏற்றி இறக்கல்)
ஆ. 09. மோட்டார் வாகனத் திருத்தம்.
ஆ. 10. மோட்டார் வாகன சேவிஸ்.
ஆ. 11. தட்டச்சு இயந்திரம், பிரதி எடுக்கும் இயந்திரம். (றோனியோ) நிழற்பிரதி எடுக்கும் இயந்திரம், தையல் இயந்திரம், தொலைக்காட்சிப் பெட்டி, கணனி இயந்திரம் முதலியன (சேவிஸ் உட்பட) திருத்தம்
ஆ. 12. அடையாள அட்டைகள் (புகைப்படம் எடுத்துத் தயாரித்து வழங்குதல்)
ஆ. 13. மீட்டார் மீள முறுக்குதல்.
ஆ. 14. தையல் வேலைகள்.

மேற்படி சேவைகளுக்காகப் பதிவுசெய்துகொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவத்தை எமது பணிமனையில் ரூபா 100/- பதிவுக்கட்டணமாகச் செலுத்திப் பெற்று 2002.12.26ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வைத்திய கலாநிதி திரு.எஸ்.சதுர்முகம்
*பணிப்பாளர்,*
(C/25012) *அரசினர் பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.*

உதயன்

## காணி வழங்குவதில் நீதி எங்கே இருக்கிறது?

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் காணி அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதம் நடைபெற்றபோது, எம்.பிக்கள் பலரும் அந்த விவாதத்தில் மிகுந்த அக்கறையுடனும் உற்சாகத்துடனும் கலந்துகொண்டனர்.

க.ணிகளின் முக்கியத்துவத்தை அது உணர்த்துகிறது.

திருகோணமலை மாவட்ட எம்.பி. திடீர் தௌபீக், விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில், யுத்தங்கள் மூளுவதற்கே பல இடங்களிலும் காணிகள் தான் காரணமாக இருந்திருக்கின்றன என்றார். பலஸ்தீன விடுதலைப்போர், வடக்கு - கிழக்கு உரிமைப்போர் முதலானவற்றை அவர் உதாரணம் காட்டிப் பேசினார்.

மலையக எம்.பிக்கள் பேசுகையில், தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புக்கும் அவர்களுக்கு வேண்டிய பாடசாலைகள், மருத்துவமனைகள் முதலானவற்றை அமைப்பதற்கும் தோட்டங்களில் காணிகள் ஒதுக்கப்படவேண்டும் என்று காணி அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் வேண்டுகோள் விடுத்தார்கள். பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம்.பயான டி.எம்.ஜயரத்ன பேசுகையில், காணி அமைச்சரின் செயற்பாடுகளுக்கு பாராட்டுத் தெரிவித்து அவருக்குச் சான்றிதழ் வழங்கினார்.

விவாதத்துக்குப் பதிலளித்து காணி அமைச்சர் பேசுகையில், பொதுமக்களுக்கு வழங்குவதற்காக 53 ஆயிரம் ஏக்கர் அரசாங்கக் காணிகள் இருக்கின்றன என்றும், காணி அற்ற 12 லட்சம் பேருக்கு அவற்றை தாம் பகிர்ந்தளிக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர் ராஜித சேனாரத்த தம்மால் செய்யக் கூடியவற்றையே சொல்லுவார்; சொன்னதைச் செய்து முடிப்பார் என்பது அனைவருக்கும் தெரியும். அதனால், அமைச்சர் கூறியதைக் கேட்டதும் அனைவருக்கும் மகிழ்ச்சி.

காணி அற்றவர்களுக்குக் காணி கிடைக்கப்போகிறது. தம்மிடம் இருந்த சொந்தக் காணியை இழந்தவர்களின் நிலை என்ன?

வடக்கு - கிழக்கில் மிகப் பெரும் எண்ணிக்கையானவர்கள் தாம் குடியிருந்த வீடு, வாசல்களையும் பயிர் செய்து பிழைத்து வந்த விளை நிலங்களையும் பறிகொடுத்துவிட்டு, இருக்க இடமின்றியும் ஜீவனோபாயத்தை இழந்தும் தவிக்கிறார்கள்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பல வதிவிடங்களும், விளைநிலங்களும் மக்களிடமிருந்து படையினரால் நசுக்கிடாமல் அபகரிக்கப்பட்டுவிட்டன.

குறிப்பாக யாழ்.வலிகாமம் வடக்கிலும் தென்மராட்சியிலும் நிலைமை மிகவும் மோசம். அதிகாரத்தில் உள்ள எத்தனையோ பேருக்கு துதிபாடிக் காவடி எடுத்தும் பயன் கிடைக்கவில்லை. வஞ்சிக்கப்பட்டவர்களுக்கு விமோசனம் ஏற்படவில்லை; வேதனை தீரவில்லை.

வடக்கு - கிழக்கு மக்களின் உடனடித் தேவைகள், புனர்வாழ்வு முதலான விடயங்களைக் கவனிப்பதற்கு அரசுக்கும் புலிகளுக்கும் இடையே தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாம் சுற்றுப் பேச்சின்போது உப குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

கண்ணிவெடிகளை அகற்றுதல், உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட மககள் அங்கே மீள்குடியமர வழிசெய்தல் போன்ற விடயங்களுக்கும் உப குழு இருக்கிறது.

இந்த உப குழுக்கள், அந்தந்த மாவட்டங்களன் தேவைகளை இனங்கண்டு துரிதநடவடிககை எடுப்பதற்கு மாவட்டக் குழுக்களை அமைத்திருக்கின்றன.

மாவட்டக் குழுக் கூட்டங்கள் சில இதுவரை நடைபெற்றும் இருக்கின்றன. எனினும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் பயன் கிடைக்கவல்லை.

மக்களைச் சொந்த இடங்களில் குடியமர வைப்பதற்கு வழி செய்யும் விதத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து வெளியேற படையினர் மறுக்கிறார்கள்.

வெளியேறுவதனால் படைநிலைகளை வேறு இடங்களில் அமைக்கவேண்டும். அதற்குத் தேவையான பணம் இப்போது இல்லை. எப்போது கிடைக்கும் என்றும் தெரியவில்லை என்கிறார்கள் படை அதிகாரிகள.

எப்படியோ பணத்தைப் பெற்று படை நிலைகளை வேறு இடங்களில் அமைத்துக்கொண்டு அங்கே சென்றுவிடவேண்டியது படையினரின் பொறுப்பு. அதை விட்டுவிட்டு, பணம் இல்லை என்ற பல்லவியை பாடிக்கொண்டு பொதுமக்களின் அடிப்படை மனித உரிமையை மீறிக்கொண்டு இருப்பதா? தங்கள் சொந்தக் குடியிருப்புக்களையும் விளை நிலங்களையும் திரும்பப்பெறாமல் சாகும் வரை அவர்கள் துன்பப் படுவதா?

காணி அற்றவர்களுக்குக் காணி வழங்கும் அரசு, மக்களிடமிருந்து பிடுங்கிக்கொண்ட காணிகளை திருப்பிக்கொடுக்காமல் இருப்பது என்ன நீதி?

# யாழ். குடாநாட்டில் வேலையற்றோர் எண்ணிக்கை 83 ஆயிரத்துக்கு மேல்

## அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ்.குடாநாட்டில் தற்போது 28.3 சதவீதமானவர்கள் வேலை வாய்ப்பு எதுவுமின்றி இருப்பதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் இருந்து தெரியவந்துள்ளது. இதன்படி யாழ்.மாவட்டத்தில் 83 ஆயிரத்து 61 பேர் வேலையற்றோராக உள்ளனர்.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கடந்த ஆண்டு முதல் மேற்கொண்ட ஆய்வுகளில் இருந்து இந்த விவரம் தெரியவந்துள்ளது.

இணையம் கடந்த ஆண்டு ஆரம்பித்த மக்களை மேலாண்மைப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி யாழ்.மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளும் 6 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. தீவகம், யாழ்-நல்லூர், வலி.மேற்கு - தென்மேற்கு, வலி.கிழக்கு - தெற்கு வடக்கு, வடமராட்சி, தென்மராட்சி எனப் பிரிக்கப்பட்ட 6 வட்டங்களிலும் மொத்தம் 50 கிராம சேவகர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு நடத்தப்பட்டது.

இந்த ஆய்வுகளின்படி யாழ்மாவட்டத்தின் முழு சனத்தொகை 5 லட்சத்து 38 ஆயிரத்து 660 ஆகும். இதில் பொருளாதார முயற்சியில் ஈடுபடுபவர்கள் 3 லட்சத்து 93 ஆயிரத்து 797 பேர், தொழில் செய்வோர் எண்ணிக்கை ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 659, தொழில் கீழுழைப்புள்ளோர் எண்ணிக்கை ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 172, தொழிலற்றோர் 83 ஆயிரத்து 61 பேர் ஆகும்.

இதன்படி குடாநாட்டின் சனத்தொகையில் 28.3 வீதமானவர்கள் தற்போது வேலையற்று இருக்கின்றனர். இவர்கள் 15 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர்கள். இந்த வயதுக்குள் வரும் வேலையற்ற குடும்பப் பெண்கள் வேலையற்றோர் எண்ணிக்கைக்குள் அடக்கப்படவில்லை. அவர்கள் தொழில் கீழுழைப்பு என்ற பிரிவுக்குள் அடக்கப்பட்டுள்ளனர்.

இந்த வேலையற்றோர் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அரசு வேலை வாய்ப்புக்களை வழங்கினால் மட்டும் போதாது. அதன்மூலம் ஒரு சிறிய எண்ணிக்கையானவர்கள் மட்டுமே வேலை பெறமுடியும். தற்போது அவசியமான நடவடிக்கை அரசு பெரியளவிலான தொழில் வாய்ப்பினை ஏற்படுத்துவதாகும். சாத்தியமான கொள்கைகள் வகுக்கப்பட்டு பல்வேறு திட்டங்களை முன்னெடுப்பதன்மூலமே இது சாத்தியமாகும் என்று இணையம் தனது ஆய்வின் முடிவில் சிபாரிசு செய்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழகத்தில் கருத்தரங்கு ஒன்றை நடத்துவதற்கும் இணையம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

(ம)

# வலி.மேற்கின் பல இடங்களிலும் வெள்ளத்தில் மிதக்கும் குடிசைகள்

## நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாதிப்பு

வலி.மேற்கு,நவ.23

குடாநாட்டில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழையால் பல இடங்களிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வலி.மேற்குப் பகுதியில் உள்ள தொல்புரம், அராலி, வட்டுக்கோட்டை, சுழிபுரம் ஆகிய இடங்களில் உள்ள தாழ்வான பகுதிகளில் வசித்துவரும் மக்களின் குடிசைகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது. இதனால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ள நீரை வெளியேற்ற மக்கள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர். சில இடங்களில் வீட்டில் இருந்து வாய்கால்களை வெட்டி வெள்ள நீரை வயல்வெளிகளுக்குத் திசை திருப்பி விடுவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

அப்பகுதி கிராம அலுவலர்கள் நேற்று அப்பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

இன்னும் சில தினங்கள் மழை தொடர்ந்தால் இப்பகுதிகளில் மக்கள் குடியிருக்கவே முடியாத நிலை ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம-175)

## வீதியில் தோண்டப்பட்ட குழிகளால் வாகனங்கள் குடைசாய்தல் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக வாகனங்கள் குடைசாய்வது அதிகரித்துள்ளது. குறிப்பாக, யாழ்.நகரை அண்டிய பகுதிகளிலேயே மிக அதிகமான வாகனங்கள் இவ்வாறு குடைசாய்கின்றன.

என்றுமில்லாதவாறு நிகழும் இச்சம்பவங்களால், யாழ். நகர வீதிகளில் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்படுவதுடன், விபத்துக்களும் ஏற்படுகின்றன.

இவ்வாறு வாகனங்கள் குடைசாய்வதற்கு யாழ்.நகரின் பல்வேறு பகுதிகளிலும் வீதிகளின் இருமருங்கிலும் தோண்டப்பட்டுள்ள குழிகளும் காரணம் எனக் கூறப்பட்டது.

நிலத்தடிக் குழாய்கள் ஊடாக தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்காக மேற்படி குழிகள் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வீதிகளின் இருமருங்கிலும் உள்ள குழிகள் காரணமாக வாகனச் சாரதிகள் வாகனங்களை வீதியோரங்களூடாகச் செலுத்துவதற்கு அஞ்சுகின்றனர். இதனால் நகரப் பகுதியில் போக்குவரத்து நெருக்கடிகள் அதிகரித்துள்ளன.

யாழ்.கண்டி வீதி (ஏ-9) திறக்கப்பட்டதையடுத்து தென்பகுதி வாகனங்களும் கொன்ரெயினர்களும் யாழ்.குடாநாட்டு வீதிகளில் வலம் வருகின்றன.

இந்நிலையில், வீதியோரங்களில் தோண்டப்பட்ட குழிகள் மீண்டும் மூடப்படும்போது உரிய முறையில் மூடப்படாவிட்டால் தற்போது பெய்துவரும் மழைகாரணமாக, இக்குழிகள் இழகி வாகனங்களின் சில்லுகள் இவற்றுள் புதைந்துவிடும் அபாயம் அதிகரிக்கும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-8-86)

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.23

மானிப்பாய் பரிஷ் லியோக் கழக்ம் தீவக லயன்ஸ் கழகத்துடன் இணைந்து நடத்தும் ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் காலை 9.00 மணிமுதல் நடைபெறும்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் தீவுப் பகுதி மாணவர்களின் நன்மை கருதி இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும்-

இதில் கலந்துகொண்டு தீவக மாணவர்களைப் பயன்பெறுமாறும் -

தீவக லயன்ஸ் கழகத் தலைவர் ப.தேவநாயகம் கேட்டுள்ளார்.

சாதாரண தரப் பரீட்சையின் முக்கிய பாடங்களான கணிதம், தமிழ், சமூகக்கல்வி, விஞ்ஞானம், ஆங்கிலம், வர்த்தகம் ஆகியவற்றுக்கான கருத்தரங்குகளே இடம்பெறவுள்ளன. கருத்தரங்கு முடிவில் அனைத்துப் பாடங்களுக்கும் இலவச மாதிரி வினாத்தாள்களும் வழங்கப்படவுள்ளன. (ம)

### நாளை

கார்த்திகை 08
ஞாயிற்றுக்கிழமை
(24.11.2002)
திதி : சதுர்த்தி
முற்பகல் 10.03 வரை
நட்சத்திரம: புனர்பூசம்
நள்ளிரவு 12.04 வரை.
சுபநேரம் : 9.11 - 10.41
ராகுகாலம் : 4.41 - 6.11
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

பெண்ணை மனித உயிராக அல்லாமல் வெறும் சடப்பொருள்போல் நடத்துவதாலேயே எல்லா இன்னல்களும் வருகின்றன.

## திருமறைக் கலாமன்றத்தின் கலைஞர்கள் மாநாடு

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கான மாநாடு ஒன்று எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது.

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர்கூடத்தில் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ள இம்மாநாட்டில் தென்னிலங்கைக் கலைஞர்கள் 30 பேர் உட்பட சுமார் 70 கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இதேவேளை -

திருமறைக் கலாமன்றத்தின் இணைவோர் உருவாக்கல் கொடிவாரம் இம்மாதம் 28ஆம் திகதிமுதல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு விசேட கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. (ம-8-4)

## வன்னியில் இருந்து வந்த பாடசாலை மாணவருக்கு இலவச சீருடை வழங்குக

### சிறுவர் பாதுகாப்பு நிதியத்திடம் கோரிக்கை

வலி.மேற்கு,நவ.23

வன்னியிலிருந்து அண்மையில் திரும்பிவந்து வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்க ஆவன செய்யுமாறு சிறுவர் பாதுகாப்பு நிதியத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேச மட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுக்கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கையை சிறுவர் பாதுகாப்பு நிதியத்திடம் விடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

கடந்த வியாழன் காலை வலி.மேற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நிர்வாக உத்தியோகத்தர் எம்.சிவராசா தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிறுவர்களின் பல தரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

★ அரசினால் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ள சீருடைகளுக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை முடிவடைந்ததினால் அண்மையில் வன்னியில் இருந்து மீளக் குடியமர்ந்த பாடசாலை மாணவர்கள் பாதிப்படைந்துள்ளனர். இவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத் திட்டம்மூலம் சீருடைகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வது.

★ விடுகைப்பத்திரம் இன்றி வன்னியிலிருந்து வந்த பாடசாலை மாணவர்களை குடாநாட்டுப் பாடசாலைகளில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது.

★ காலம் கடந்த பிறப்புக்களை யாழ்.மாவட்ட மேலதிக இறப்பு, பிறப்பு பதிவாளருடன் தொடர்புகொண்டு பதிவுசெய்வதற்கு ஆவன செய்வது போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ம-175)

# நன்றி நவிலல்

## திருமதி கந்தையா நாகம்மா

11.11.2002 இல் எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த எமது பாசமிகு அன்னையார் **திருமதி கந்தையா நாகம்மா** அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடிவந்து உதவிகள்பல செய்தவர்களுக்கும் ஆஸ்திரேலியா, ஜேர்மனி, லண்டன், பரிஸ், சுவிஸ் நகரங்களில் இருந்து தொலைபேசிமூலம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மாலைகள் சாத்தி துயரில் பங்குகொண்டவர்களுக்கும் பல இடங்களிலுமிருந்துவந்து இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், தாயார் நோயுற்ற வேளையில் வைத்திய உதவி புரிந்த யாழ்.போதனாவைத்தியசாலை டாக்டர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், உதவியாளர்களுக்கும், அன்னையாரின் ஆத்மசாந்தி வேண்டி இல்லம் வந்து ஜெபம்செய்த குருமார், கன்னியாஸ்திரியர்களுக்கும் இன்னும் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

\- பிள்ளைகள்

*105, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (10866)

## வானில் வந்தவர் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்த சடலம்

யாழ்ப்பாணம்,நவ.23

வீதியில் கிடந்ததாகத் தெரிவித்து இனந்தெரியாத சடலம் ஒன்று நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தை எடுத்து வந்தவர் தமது விவரத்தையோ, சடலத்தின் விவரத்தையோ கொடுக்காது வெளி நோயாளர் பிரிவில் கடமையில் இருந்த சிற்றூழியர்களிடம் சடலத்தை ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டதாகக் கூறப்படுகின்றது.

சுமார் 60 வயது மதிக்கத்தக்கவருடைய இச்சடலத்தில் பச்சைக்கோடிட்ட ரீசேட்டும், நீலம் மற்றும் மண்ணிற வர்ணக்கரையிட்ட சாரமும் காணப்பட்டன. விரல்களில் வெள்ளிமோதிரம் ஒன்றும், தங்கநிற மோதிரம் ஒன்றும் அத்துடன் சிறு தொகைப்பணமும் இருந்தன.

இச்சடலம் மரணவிசாரணையின் பொருட்டும், இனம் காணும் நிமித்தமும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஓ-139-15)

## விற்பனை ஆலோசகர்கள்/பிரதிநிதிகள்
## SALES CONSULTANTS / REPRESENTATIVES
யாழ்ப்பாணம்

*சிலிங்கோ ஆயுட் காப்புறுதியை பிரதிநிதித்துவப்படுத்த விரும்புபவர்களுக்கு!*

**அவர்களது வருமானம்** தரகை *(COMMISSION)* அடிப்படையாகக் கொண்டும், செயற்றிறமை, தனியார் சொந்த ஈடுபாடு என்பவற்றிலேயே முற்றுமுழுதாக தங்கியுள்ளது. ஆயுட் காப்புறுதித் துறையில் அனுபவம் விரும்பத்தக்கது. ஆயினும் அது கட்டாயம் இல்லை.

**விற்பனைகளில் முன்அனுபவம்** நிச்சயமாகக் கருத்திற் கொள்ளப்படும். கணிதம் உள்ளிட்ட க.பொ.த.சாதாரண தர சித்தி அடிப்படைத் தகைமையாகும். இத்துடன் நல்ல குடும்பப் பின்னணி தேவையாகும்.

ஆண், பெண் இருபாலாரும் அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 30.11.2002

**சிலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட**

*இல.560, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
*(முதலாவது மாடி செலான் வங்கிக் கட்டடம்)* (சி-25009)

உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீ சித்திரபானு வருஷம் கார்த்திகை மாதம் 08ஆம் திகதி நாளை (24.11.2002) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.25 மணிமுதல் 10.53 மணிவரையுள்ள (புதிய நேரப்படி) தனுசு லக்கினமும், சித்தயோகமும், புனர்பூச நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**ரூபேஷ்** (டோகா)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**விஜயரூபி**
அவர்களுக்கும்

**நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில்**
திருமணம் செய்ய ஸ்ரீ காமாட்சி அம்பாளின் திருவருள் பாலித்திருப்பதால் அவ்வமயம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தாங்கள் நல்வரவை நாடும்:

**திரு.திருமதி ஆறுமுகம்**
வீடியோ எக்கணமி மியூசிக் கோணர்
இல.612/4, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.

**திரு.திருமதி சண்முகரட்ணம்**
இல.15, மலர்மகள் வீதி, அரியாலை.
நிரந்தரமுகவரி : நாவற்குழி கிழக்கு,
தச்சன் தோப்பு, கைதடி.

*(இருவீட்டார் அழைப்பு)*

(10864)

# பதவி வெற்றிடம்

## விற்பனை நிறைவேற்று அதிகாரிகள்

தனியார் காப்புறுதித் துறையில் கடந்த தசாப்த காலமாகத் தொடர்ச்சியாக முன்னோடிகளாகத் திகழும்

**சிலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்**

(ஆயுட் பகுதி)

நிறுவனத்தினர் தங்களது கிளைகளுக்குத் தகுதிவாய்ந்த விற்பனை நிறைவேற்று அதிகாரிகளை நியமிக்க விரும்புகின்றனர்.
இந்தப் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் குறைந்தது 2 வருட முன் அனுபவமும் A/L சித்தியும் அல்லது 4 வருட முன்அனுபவமும் O/L சித்தி அடைந்தவராகவும் ஆங்கில அறிவுள்ளவராகவும் இருத்தல் அவசியமாகும்.

**தகுதியுடையோர் 30.11.2002இற்கு முன் விண்ணப்பிக்கவும்.**

சிலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
இல.560, ஆஸ்பத்திரி வீதி,
*(முதலாவது மாடி, செலான் வங்கிக் கட்டடம்)*
யாழ்ப்பாணம். (சி-25010)

## பரீட்சை ஆவணங்களை இணைப்பு நிலையங்களுக்கு விநியோகிப்பதற்கு மோட்டார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான

# கூறுவிலை கோரல்

2002.12.02 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. (சா/த) பரீட்சை ஆவணங்களைச் சேகரிப்பு நிலையத்திலிருந்து இணைப்பு நிலையங்களுக்கு எடுத்துச்செல்வதற்கும், திரும்பவும் சேகரிப்பு நிலையத்திற்கு எடுத்துவருவதற்கும் மோட்டார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கூறு விலைகள் கோரப்படுகின்றன.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களையும், கூறுவிலைக்கான படிவங்களையும் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். இக்கூறுவில்லைகள் 2002.11.28 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

திருமதி.செ.மகாலிங்கம்,
*வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.* (C/25013)

## சாவகச்சேரி நகரசபை
## 2003 ஆம் ஆண்டிற்கான
# கேள்வி அறிவித்தல்

01.01.2003 தொடக்கம் 31.12.2003 வரையிலான காலப்பகுதியில் கீழ்க்குறிப்பிடப்படும் வியாபாரம்/சேவைகளுக்கான கேள்விகள் இரு பிரதிகளில் 04.12.2002 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ. வியாபாரம்

| விவரம் | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்பு | படிவக்கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. ஆட்டிறைச்சிக்கடை என்.எம்.எஸ் | 1 | ரூ.50000/- | 1000/- | 200 உம் பெறுமதி கூட்டிய வரி 20% மும் |
| 2. ஆட்டிறைச்சிக்கடை என்.எம்.எஸ் | 2 | ரூ.50000/- | 1000/- | " " |
| 3. மாட்டிறைச்சிக்கடை என்.எம்.எஸ் | 3 | ரூ.50000/- | 1000/- | " " |
| 4. மாட்டிறைச்சிக்கடை என்.எம்.எஸ் | 4 | ரூ.50000/- | 1000/- | " " |
| ஆ. சேவைகள் | | | | |
| குப்பை கூளங்களை அகற்றுதல் உழவு இயந்திரம் பெட்டியுட்பட வாடகைக்கு விடுதல் நாள்ஒன்றுக்கு | | | 1000/- | " " |

மேற்படி வைப்புப்பணம், கேள்விப் படிவக் கட்டணங்கள் செலுத்தப்படுவதன் பேரில் 29.11.2002 ஆம் திகதி 12.30 மணிவரை வழங்கப்படும். உரிய படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படும். மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும். இது சம்பந்தமான ஏனைய விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*குறிப்பு :* சித்தியடையும் கேள்விக்காரர் கேள்வித் தொகையுடன் 20% பெறுமதி சேர் வரியும் செலுத்த வேண்டும்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
15.11.2002

பெ.தனபாலசிங்கம்
தலைவர்,
நகரசபை, சாவகச்சேரி. (C/25016)

# 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
06
\-
10
\-
1927



மறைவு
23
\-
11
\-
1990

## அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்

(யாழ்.மா.சி.க.கூ.ச.சமாசத்தின் ஸ்தாபகரும், முன்னாள் தலைவரும்)

சமாசத்தின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் ச.ஞானப்பிரகாசம் அவர்களின் 12 ஆவது ஆண்டினை நினைவு கூருகிறோம்.

*இல 637 (383),*
*கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/25007)

யாழ்.மாவட்ட
சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச்
சங்கங்களின் சமாசம்.

# அன்பு செலுத்தி ஆனந்தத்தை அனுபவியுங்கள்!



**பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 77ஆவது அவதார தினம் இன்றாகும். அதனை ஒட்டி 25.12.96 கிறிஸ்மஸ் தினத்தன்று அவர் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள் இங்கே பிரசுரமாகின்றன.**

மனித வாழ்க்கையில் உள்ள வேறுபாடுகளைக் களைந்து, அவர்களிடையே ஒற்றுமையை உருவாக்கி தலைசிறந்த சமுதாயமாக மாற்றுவதே மதங்களின் நோக்கம் என்கின்ற சத்தியத்தை உணர்ந்து, புரிந்துகொள்வது ஒவ்வொருவரின் கடமையுமாகும். அனைத்து மதங்களின் சாரமும், அனைத்துப் புனித நூல்களின் மூலமும், அனைவரும் கடைசியில் அடையவேண்டிய இலக்கும் ஒன்றே! ஆனால, மனிதன், தன் சுயநலத்தினாலும், குறுகிய நோக்கினாலும், மதத்தைக் கருவியாகக் கொண்டு கலகத்திலும், சண்டைகளிலும் ஈடுபடுகின்றான்.

எல்லா மதங்களும் நல்லனவற்றையே போதிக்கின்றன. நாம்தான் நல்லறிவுடன் நடந்துகொள்ள வேண்டும். நம்மனம் நல்லதாயிருந்தால் எந்த மதம் தீமை மிகுந்தது? பாரதத்தின் வீரப் புதல்வர்களே! இதை உன்னிப்பாகக் கேளுங்கள்.

எல்லா மதங்களுக்கும் ஆதாரமான முக்கிய தத்துவங்கள்: ஒழுக்கம், தானம், தர்மம், சத்தியம், பாரம்பரியம், கலாசாரம், சகிப்புத்தன்மை மற்றும் அஹிம்சை முதலானவை. இத்தகைய உண்மைகளை எல்லா மதங்களும் அங்கீகரிக்கின்றன. ஆனால், பண்டைக் காலத்திலிருந்தே இந்த ஒற்றுமைகளை மறந்துவிட்டு வேறுபாடுகளையே நினைத்து மதங்கள் வளர்ந்து வந்திருப்பதால், மனிதகுல நலன்களே மறந்து போய்விட்டன. மனித வாழ்க்கையில தெய்வீகத்தில் இருக்கும் ஒற்றுமையைப் பற்றிப் புரிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியமானது.

"யேசு" என்றால் என்ன? "யே" என்றால் ஒன்று. "சு" என்றால் "பவித்ரம்". பவித்ரம் ஒன்றே! இவ்வுலகம் முழுவதும் இறைவன் மட்டுமே புனிதமானவன் என்ற நம்பிக்கை யூதர்களிடம் இருந்து வந்தது. "யேசுவின் பெயர் பரவ ஆரம்பித்ததும் சந்தேகங்களும் உடன் தோன்றத் தொடங்கின. இளம் வயதிலேயே "யேசு"வின் தந்தை மறைந்துவிட்டார். தாயைப் போற்றுவிதமாக மாத்ரு தேவோபவ, பித்ருதேவோபவ என்னும் தத்துவப்படி இயேசு சேவை செய்யத் தொடங்கினார். பெற்றோருக்குச் சேவை செய்தல் மிகவும் முக்கியமானது. ஏன்நம்முடைய "தூட்டு", "Food, Blood, Heart" எல்லாம் பெற்றோர்களுடைய பரிசுதான் அல்லவா? ஆகையால் முதலில் அவர்களுக்கு நம்முடைய நன்றியைத் தெரிவிக்கவேண்டும். அந்நாளைய இளைஞர்களுக்கு இத்தகைய புத்திமதிகளை "யேசு" கூறி வந்தார். தன் பதினோராவது வயதில் "யேசு" ஜெருசலேம் வந்தடைந்தார். ஜெருசலேம் வந்த பிறகு, இயேசுவின் தாயாருக்கு மிகுந்த மனவருத்தம் ஏற்பட்டது. அங்கிருந்த கோயிலில் அதிகமான அளவில் கொடூரச் செயல்கள் நடந்துவந்தன. அந்த ஹிம்சைகளை தடுத்து இறைவன் எல்லா உயிரினங்களிலும் நிறைந்துள்ளான் என்பதைப் போதித்தார் ஜீசஸ். "மக்களே! உங்களால் உபகாரம் செய்யமுடியவில்லை என்றாலும் பரவாயில்லை. அபகாரமாவது செய்யாதிருங்கள்! "Help ever Hurt never" என்றார். எல்லா மதங்களின் சாரமும் இதுதான். அத்தனை மதங்களின் ஒருமைப்பாடும் இதுவே. இந்தப் போதனை மனிதகுலம் முழுமைக்குமாக என எடுத்துக கூறினார் இயேசு.

அதன்படி நோயுற்றவரின், வேதனை தீர்த்தார். பசியுற்றோருக்கு உணவு ஊட்டி பசி நீக்கினார். இப்படிப்பட்ட உதவி புரிவதைக் கண்டவர் இயேசுவை இறைவனின் குமாரன் என அழைத்தனர். இதுவே படிப்படியாக இயேசு இறைவனின் மகன் என நிலைத்தது. ஆனால், இறைவன் என்ற தந்தை ஒருவன் இருக்கிறான் என்பதை இது உணர்த்தியது.

### சரணாகதி

எல்லா மதங்களின் சாரமும் ஒன்றே! முழுமையான சரணாகதி என்பது மிகவும் அவசியம்! இங்கே **Surrender** என்னும்போது நானும் இறைவனும் ஒன்றே என்ற உள்ளுணர்வு தேவை! காரணம் என்ன? நீயும் நானும் ஒன்றே! உடல்கள் வேறாக இருக்கலாம். இவையெல்லாம் "பல்புகள்" போல, இவற்றினுள் ஊடுருவிச் செல்லும் மின்சாரம மட்டும் ஒன்றுதான். இவற்றின் நிறம், **Voltage** வேறாக இருந்தாலும் மின்சாரம் ஒன்றுதான் என்பதுபோல திவ்வியத்துவமும் ஒன்றேதான்!

ஒரேதெய்வம்தான் அனைவரிடமும் நிறைந்திருக்கின்றது. கருவிகளான உடல்கள் வேறுவேறாக இருப்பதைக்கண்டு குழப்பமடையாதீர்கள். குழப்பத்திற்குத் தேவையே இல்லை, குழப்பத்திற்கு காரணம் உடல்மேல் வைத்த பற்றுதலதான். இந்தத் தேகத்தை நிரந்தரம் என நினைக்காதீர்கள். **Body is like a water Bubble Mind is like a mad monkey.** அதனால் **Don't follow the body - Don't follow the mind follow the Conscience.**

பாரத கலாசார மரபுப்படி இதனை "சித்" என அழைத்தனர். சத், சித், ஆனந்தம் இம்மூன்றும் நம்முள்ளேயே இருக்கின்றன. இத்தகைய விஷயங்களை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

### பலம்

ஏதோ புத்தகங்களைப் படிக்கின்றோம். யாரோ பெரியவர்களைத் தேடி ஓடுகிறோம். ஆனால், அவர்கள் உண்மையிலேயே பெரியவர்கள்தானா? இல்லையா? என்று யோசிப்பதில்லை. உன்னை விடப் பெரியவர் எவருமில்லை. ஆனால், உனது சத்தியமே உனக்கு விளங்கவில்லை. யானைக்குத் தன் பலம் தெரியாது. அதனால்தான் மாவுத்தனின் அங்குசத்திற்கு அடங்கிப் பணிகிறது. இப்பிரபஞ்சமே உனககுள் இருக்கிறது. அத்தனை சக்திகளும் உன்னுடையனவே. இதையே **Free Will** என்றனர். இது எங்கோ தனியே இல்லை. ஆத்மாவுடன் சம்பந்தப்பட்டது. தெய்வத்துவமே **Free Will**. இந்த அடிப்படைத் தத்துவத்தை மறந்துவிடுகின்றோம். புத்திபலம், புஜபலம், பணபலம் இவையே பிரதானமாகக் கருதுகின்றோம்.

### பிரேமபாசம்

இறைவனை அடைய வேண்டுமானால் உன்னுள் இருக்கும் தெய்வீகத்தை உணரவேண்டுமானால் உன்னையே நீ புரிந்துகொள்ளவேண்டுமானால், நிர்மலமான பிரேமையை வளர்த்துக் கொள்ளவேண்டும். இந்த அன்பே அனைவரையும் கட்டிவைக்கும் கயிறு. இதைத்தான் "பிரேமபாசம்" **(Bond of Love)** என்றனர்.

உலகியல் சுகங்களும், வசதிகளும் எல்லாம் நகர்ந்து செல்லும்

**சேவைப்பகுதி,**
**பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம்,**
**யாழ்ப்பாணம்.**

மேகங்களைப் போன்றவை. இவை எத்தனை காலம் நிலைக்கும், எத்தனையோ புதிய வெளிநாட்டவர் வந்த வண்ணம் இருக்கின்றனர். எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் அடிப்படையான தத்துவங்களை மாற்றிக்கொள்ளக்கூடாது. பிறக்கும்போது குழந்தை பத்துவயதான பிறகு Boy, முப்பது வயதிற்குப் பிறகு Man, எழுபத்தைந்து வயதிற்கு பிறகு அவன் Grand Father. ஒரே மனிதனுக்கு வயதாக வயதாகப் பெயரும் மாறுகின்றது. இதுவே அடிப்படைத் தத்துவம். ஒரே மனிதன்தான் அவனே குழந்தை, பையன், மனிதன் பிறகு முதியவனாக மாறுகிறான். அதேவிதமாக தெய்வம் முதலில் சாகாரஸ்வரூபி (திருவடிவம்) பிறகு துன்பம் வரும் வேளையில் இஷ்டத்தைக் கொடுக்கும். 'ஆர்த்தி' யாக வணங்குகின்றோம். அதன் பின்னர் செல்வத்தைத் தரும் அர்த்தார்த்தியாகக் காண்கின்றோம். அதனை அடுத்து ஜிக்ஞாஸுவாக, ஆத்ம விசாரணை செய்யும் விதமாகக் காண்கின்றோம். இவ்வாறு இறைவனுடன் நெருக்கத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

### கேட்பது கிடைக்கும்

ஒரு சிறிய கதை. ஒரு பணக்காரருக்கு நான்கு மனைவிகள் இருந்தார்கள். முதல் மனைவி ஆன்மீகத்தில் மிகவும் நாட்டமுள்ளவள். இரண்டாவது மனைவிக்கு உடல் நலம் சரியில்லை. மூன்றாவது மனைவி நிறைய 'சத்' புத்தகங்கள் படிப்பவள். நான்காவது மனைவி மிகவும் நவீனமானவள். விதவிதமான புடைவை, நகைகள் மீது ஆசை கொண்டவள் (சிரிப்பு). இந்தப் பணக்காரர் ஒரு வேலை நிமித்தமாக அமெரிக்கா சென்றார், அங்கு சென்ற பணி முடியாததால் ஊர்திரும்புவது தள்ளிப் போய்க்கொண்டேயிருந்தது. நான்கு மனைவியருக்கும் கடிதங்கள் எழுதினார். 'அடுத்தவாரம் வருகின்றேன்' உங்களுக்குத் தேவையானவற்றை எழுதி Fax மூலம் அனுப்புங்கள். (சிரிப்பு, கைதட்டல்) நான்காவது மனைவி அதிநவீன புடைவைகளும், நகைகளும் கொண்டுவரும்படி செய்தி அனுப்பினாள். மூன்றாவது மனைவி சான்றோருடைய திவ்விய சரித்திரங்கள் வேண்டும் எனக் கோரினாள். இரண்டாவது மனைவி தனது நோய் தீர புதிய மருந்து ஏதாவது இருந்தால் வாங்கி வரும்படி கூறினாள். முதல் மனைவி 'எனக்கு ஏதும் வேண்டாம்! நீங்கள் சேஷமாக இங்கு வந்து சேர்ந்தாலே போதும்!' என எழுதினாள். கணவா ஊர் திரும்பினார். நான்காவது மனைவி கேட்டபடி புடைவைகள், நகைகள் போன்றவற்றைக் கொண்டுவந்து கொடுத்தார். மூன்றாவது மனைவிக்கு அவள் கேட்ட புத்தகங்களைக் கொடுத்தார். இரண்டாவது மனைவிக்கு மருந்து கொண்டு வந்து தந்தார். முதல் மனைவி வீட்டில் போய்த் தங்கினார். மற்ற மூவருக்கும் கோபம் வந்தது. ஏன் அங்கு தங்கி விட்டீர்கள்? இங்கு வந்தால் என்ன என்று கோபித்தார்கள். ஒரு மனைவி இருந்தாலே வாழ்க்கை கஷ்டம்! இரண்டாவது மனைவியும் இருந்தால் சொல்லவே வேண்டாம்! மூன்று மனைவிகள் தசரதனுக்கு இருந்ததால்தான் ஸ்ரீராமர் வனவாசம் போகநேரிட்டது. (கைதட்டல்) நான்கு மனைவிகள் இருந்தால் தாங்கமுடியுமா? மூன்று மனைவிகளும் சண்டை போட்டனர். கணவன் சொன்னான் "நீங்கள் கேட்டது உங்களுக்குக் கிடைத்தது. நீ நகைகளும் புடைவைகளும் கேட்டாய். நீ நல்ல புத்தகங்கள் கேட்டாய். அடுத்தவள் மருந்து கேட்டாள். அனைத்தையும் கொடுத்துவிட்டேன். அவள் என்னை மட்டுமே கேட்டாள். அங்கு தங்குவது என்ன தவறு? கடவுளும் அப்படியே! இவ்வாறே நடந்து கொள்கிறார். (பலத்த கைதட்டல்)

'கடவுளே! எனக்குச் செல்வங்களும் வசதிகளும் கொடு' என ஆவலோடு கேட்பவருக்கு அவற்றையும் அருளுகிறார்.

'கடவுளே! எனக்கு ஞான உபதேசமும், வித்தையும் கொடு' என ஆவலோடு கேட்பவருக்கு அவற்றையும் அருளுகிறார்.

"கடவுளே! எனக்கு ரோக நிவாரணம் தரவும்!" எனப் பிரார்த்தனை செய்பவருக்கு **Super Speciality Hospital** செய்து தருகிறார். (கைதட்டல்)

"கடவுளே! நீயே எனக்கு வேண்டும்!" எனக் கோருபவருக்கு சமீபமாகிப் போகிறார்.

ஆர்த்தி, அர்த்தார்த்தி, ஜிக்ஞாஸு, ஞானி இவை நான்கு வழிகள். இறைவனை அடைய நீ எதைக் கேட்கிறாயோ, அதுவே உனக்குக் கிடைக்கும்! உலகில் வேறு எதுவும் முக்கியமில்லை. கடவுளே முக்கியம்! அவர் உன்னுடையவராகிப் போனால் அனைத்தும் தானாகவே வந்துசேரும்.

உங்கள் அனைவரிடமும் அன்பு இருக்கிறது. அதைக் குறைந்தது 10 பேரிடமாவது பகிர்ந்துகொள்ளுங்கள். உடன் இருப்பவரிடம் அன்பைச் செலுத்தி அந்த ஆனந்தத்தை அனுபவியுங்கள். பிரேமை என்பது ஒரு வழிப்பாதையல்ல **Give & Take** என்ற இருவழிப்பாதை. அறிவற்றவர்கள்தான் அந்தக்கடவுள், இந்தக்கடவுள் என்று அலைந்து திரிந்து பணததைச் செலவழிக்கிறார்கள்; முட்டாள்தனமாகச் செயற்படுகிறார்கள். எங்கும் செல்லவேண்டிய அவசியம் இல்லை! இறைவன் இதயத்தினுள்ளேயே இருக்கின்றார். மனதுக்குப் பிடித்த இறைவன்மேல் முழு நம்பிக்கை வையுங்கள்! உங்கள் நம்பிக்கையை நாளுக்குநாள் மாற்றிக் கொண்டே இருக்காதீர்கள். உங்களது ஒருமுகமான முனைப்பை மாற்றாதீர்கள். ஒரே வழியைப் பின்பற்றுங்கள்! ஒரே கடவுளை நம்புங்கள்! இதுவே பிரேமதத்துவம்!

★

# நடமாடும் மனித தெய்வம் பகவான் சத்ய சாயி பாபா



**சி.சிவகௌரி**
**மட்டுவில் வடக்கு**

இன்று உலகம் முழுவதுமுள்ள மக்கள் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 77ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றனர். சாயி பாபா என்ற தெய்வீகம் - பரிபூரணம் - மங்கலம் எமக்குள் எங்கும் நிறைந்து அருள் சொரிகிறது. அந்தப் பூரணத்தை - தெய்வீகத்தை - உணர்ந்து கொள்ளும் அவதாரக் காலத்தில் நாம் வாழ்வதைப் பெரும் பாக்கியமாகவே கொள்ளவேண்டும். மனிதனை சீராக்கி-நேராக்கி மனிதத்துடன் தெய்வீகத்தைப் புரியவைக்கவே பகவான் எம்மிடையே மனிதராக அவதரித்துள்ளார். அவர் ஒரு அவதார புருஷர். பகவான் பாபா ஆந்திரப் பகுதியிலுள்ள மிகவும் பின்தங்கிய, வரட்சி நிறைந்த 'புட்டபர்த்தி' என்ற கிராமத்தை சர்வதேச நகரமாக்கியதுடன் நவீன வசதிகள் கொண்ட பிரமாண்ட மருத்துவமனையையும் கட்டி, உலகை வியப்பில் ஆழ்த்தியவர். அவர் தமது ஒவ்வொரு அசைவின் மூலமும் எம்மை நல்வழிப்படுத்த வந்த சித்தர் என்பதையே காட்டி நிற்கின்றார். பலநூறு கோடி மக்களால் உலகெங்கும் வழிபடப்பட்டுவரும் நடமாடும் மனித் தெய்வம்தான் பகவான் சத்ய சாயிபாபா. பகவான் சந்நிதியில் இனம், சாதி, மதம் என்ற பேதம் கிடையாது. அனைவரும் அவருடைய குழந்தைகளே. அவரை நம்பி வழிபடுவோரை தாயாய் - தந்தையாய் எல்லாமாய்க் காத்து அருள் கின்றார். பகவான் எந்தவொரு புதிய மதத்தையும் நிறுவவோ போதிக்கவோ இல்லை. உலகிலுள்ள அனைத்து மதத்தையும் அனுசரித்து 'ஒருவனே தேவன்' என்ற அடிப்படையில் சாயி இயக்கத்தை உருவாக்கியுள்ளார். சுருங்கக் கூறின், இன்று ஒரு பூரண அவதாரம் எம்மிடையே வந்து அன்பினை மனித குலத்திடையே பதித்துள்ளது. ஸ்வாமி அன்பையே வலியுறுத்துகிறார்.

'இளைஞர்களைப் பார்த்து அவர் இப்படிக் கூறுகின்றார். "நான் உங்களைக் கேட்பதெல்லாம் உலகைக் காக்கும் உன்னத தலைவர்களாய் உயருங்கள் என்பதுதான். சிங்கத்தைப் போன்ற தலைவர்களாக - சுயசார்புடன், தைரியத்துடன்-மேன்மையுடன் - நியாயத்துடன் விளங்க வேண்டும். மிருகங்களுக்கெல்லாம் அரசனாக விளங்குவது சிங்கம். நீங்கள் மனிதர்களிடையே அரசனாகத் திகழவேண்டும்." தாயை அன்பின் வடிவமாகப் போற்றும் பகவான் சத்யசாயி பாபா, எல்லோரும் தாயை மதிக்கவேண்டும். அதுவே முக்கியமான பூஜை. அதுவே விரதம். அதுவே தவம் என்கின்றார். அது மட்டுமன்றி உயிருடன் தன் அருகே இருக்கும் தங்களுடைய தாய், தந்தையரை மதிக்காத எவனாலும் உருவமற்ற - குணங்களுக்கு அப்பாற்பட்ட - இறைவனை நேசிக்கவே முடியாது. பெற்றாரைத் திருப்தி செய்யாத எவனாலும் உருவமற்ற குணங்களுக்கு அப்பாற்பட்ட - இறைவனை திருப்தி செய்யமுடியாது என்றும் கூறுகின்றார் ஸ்வாமி. நாம் இதய சுத்தியுடன் எல்லோரையும் அன்பு செய்யும்போது எம்மில் இறைவனையே காணலாம். இறைவனைத் தேடி நாம் எங்கும் அலைய வேண்டியதில்லை. என்று கூறும் பகவான் "The distance between God and you is the same as the distance between you and yourself" என்கிறார். நாம் அன்புருவான - ஆனந்த ரூபன் சத்யசாயி பாபாவை ஒரு நிலைவாகத் தியானித்து - அனைவரும் என்றும் நீங்காத சாந்தியையும் சமாதானத்தையும் பெறுவோமாக! ★

# சிறந்த கால்பந்தாட்ட வீரர் விருதுக்கு ரொனால்டோ, ஒலிவர்கான், ஸிடன்

சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் 2002ஆம் ஆண்டுக்கான உலகின் சிறந்த வீரர் விருதுக்கு ரொனால்டோ, ஒலிவர்கான், ஸினடின் ஸிடன் ஆகியோரின் பெயர்கள் இறுதிச் சுற்றுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் டிசெம்பர் 17ஆம் திகதி ஸ்பெயினின் மட்ரிட் நகரில் இவ்விருது வழங்கப்படவுள்ளது.

1991ஆம் ஆண்டு முதல் இவ்விருது வழங்கப்படுகிறது.

கடந்த உலகக் கிண்ணப் போட்டிகளின் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்ட ஜேர்மன் அணித்தலைவரும் கோல் காப்பாளருமான ஒலிவர்கான் இவ்விருதை வென்றால் இவ்விருதைப்பெறும் கோல் காப்பாளராக விளங்குவார்.

பிரேஸில் வீரரான ரொனால்டோ, உலகக் கிண்ணப் போட்டிகளில் 8 கோல்களை அடித்து தங்கக் காலணி விருதை வென்றவர். இவரும் பிரான்ஸ் வீரரான ஸினடின் ஸிடனும் ஏற்கனவே இரு தடவை இவ்விருதை வென்றுள்ளனர். இவ்விருவரும் தற்போது ஸ்பெயினின் ரியல் மட்ரிக் கழகத்திற்காக விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த தடவை போர்த்துக்கல் வீரர் லூயிஸ்.'.பிகோ வென்றார்.

கடந்த தடவை சிறந்த வீராங்கனையாக அமெரிக்காவின் மியா ஹம் தெரிவானார். இம்முறையும் இறுதிச் சுற்றில் அவர் இடம்பெற்றுள்ளார்.

ஜேர்மனியின் பிறைக்ட் பிரின்ஸ், சீன வீராங்கனை சுன்வென் ஆகியோர் சிறந்த வீராங்கனை விருதுக்கான இறுதிப் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஏனைய வீராங்கனைகளாவர். (ம-5)

## சார்ஜா போட்டிகளில் தென்னாபிரிக்கா

சார்ஜா,நவ.23

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் பின்னர் தென்னாபிரிக்க அணி சார்ஜாவில் ஒருநாள் சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ளது.

இவ்வாறு சார்ஜா நல நிதிய கிரிக்கெட் தொடர் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

ஆரம்பச் சுற்றில் ஒவ்வோர் அணியும் ஏனைய அணிகளை தலா இரு தடவைகள் எதிர்த்து விளையாடவுள்ளன.

இறுதியாக 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் தென்னாபிரிக்க அணி சார்ஜாவில் போட்டிகளில் பங்குபற்றியது.

# விளையாட்டு

தென்னாபிரிக்காவுடன் இலங்கை, பாகிஸ்தான் அணிகள் இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளன.

அடுத்த வருடம் ஏப்ரல் 1 தொடக்கம் 10ஆம் திகதி வரை இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் ஹன்சி குரொஞ்ஜே இறுதியாகப் பங்குபற்றிய சுற்றுப் போட்டி இதுவாகும். இதுவரை 191 ஒருநாள் போட்டிகள் சார்ஜாவில் நடைபெற்றன. (ம-5)



யாழ்.கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தப் பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்ட கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலய அணி வீரர்கள், பொறுப்பாசிரியர்கள் ஆகியோரைப் படத்திற் காணலாம். (ம-51)

## இந்தியா வெற்றி

கொல்கத்தா,நவ.23

இந்தியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணிகளுக்கிடையேயான ஒருநாள் போட்டித் தொடரின் 6ஆவது போட்டியில் இந்திய அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது.

இந்தியாவின் ஜோத்பூர் என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 46.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 201 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. அந்த அணியின் சார்பில் சந்திரபோல் 58 ஓட்டங்களையும் கால் கூப்பர் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

கடந்த 5 போட்டிகளிலும் திறமையாக விளையாடிய ஹிண்டஸ், கிறிஸ் ஹெயில், சர்வான் ஆகிய மூவரும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இந்திய பந்து வீச்சாளர்கள் அஜித் அகார்கர், முரளி கார்த்திக் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், சஞ்சய் பங்கார் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 46.2 ஓவர்களில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைந்து வெற்றியீட்டியது.

இந்திய அணி சார்பாக ராகுல் திராவிட் 58 ஓட்டங்களையும் யுவராஜ் சிங் 54 ஓட்டங்களையும், சஞ்சய் பங்கார், அஜித் அகார்கர் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 32, 6 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக அஜித் அகார்கர் தெரிவுசெய்யப்பட்டார்.

7 போட்டிகள் கொண்ட தொடரில் இதுவரை நடைபெற்ற 6 போட்டிகளில் இரு அணிகளும் மும்மூன்று வெற்றிகளைப் பெற்றுச் சமநிலையில் உள்ளன.

இறுதியும், வெற்றியை நிர்ணயிப்பதற்குமான போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை இந்தியாவின் விஜயவாடா என்ற இடத்தில் நடைபெறவுள்ளது. (ம-5)

## சாயிபாபா அவதார தினம்

பருத்தித்துறை சாயி மந்திர் நிலையம் நடத்தும் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 77ஆவது அவதார நிகழ்வு இன்று அதிகாலை 4.30 மணி முதல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் "சுவாமியின் அற்புதங்கள்" என்ற தலைப்பில் வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா இணைப்புக் குழுத் தலைவர் இ.வசந்தசேனனும் 'சாயியின் வழியில்' என்ற தலைப்பில் கலட்டி றோ.க. பாடசாலை ஆசிரியர் திருமதி சிவமலர் சுப்பிரமணியமும் உரைநிகழ்த்துவர். (எ-5-173)

★ ★ ★

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் நடத்தும் பகவானின் அவதார தின நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மேற்படி நிலையத்தில் நடைபெறவுள்ளது. பல்கலைக்கழக சங்கீத பீடத் தலைவர் கலாநிதி என்.வி.எம்.நவரத்தினத்தின் விசேட சொற்பொழிவை அடுத்து திருவூஞ்சல் நிகழ்ச்சியுடன் நிறைவுபெறும். (ம-5)

★ ★ ★

மானிப்பாய் சோதிவேம்படி சத்திய சாயி நிலையம் நடத்தும் பகவான் சத்தியசாயி பாபாவின் 77ஆவது பிறந்ததின விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நிலைய லக்ஷ்மி மண்டபத்தில் வடபிராந்திய ஸ்ரீசத்தியசாயி சேவா இணைப்புக்குழுத் தலைவர் இரா.வசந்தசேனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிலையக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி செல்வி வசந்தி அரசரட்ணம் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (எ-5-90)

# முன்னாள் வீரர்களுக்கு கௌரவம்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளை முன்னிட்டு 41 முன்னாள் விளையாட்டு வீரர்களைக் கௌரவ தூதர்களாக தென்னாபிரிக்க அரசு நியமித்துள்ளது.

முன்னாள் டென்னிஸ் நட்சத்திரம் வானே பெரைரா, கென்யாவைச் சேர்ந்த ஒலிம்பிக் ஓட்டப்பந்தய வீரர் கிப் கீனோ, முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கிரீமி போலாக், பாசில் ஒலீவிரா, கால்பந்து வீரர் லூகாஸ் ராடிபே, நீச்சல் வீரர் ஜோடி ஸ்கீட்டர், மரதன் வீரர் ஜோஷியாதுங்வானே, நீச்சல் வீராங்கனை பென்னி ஹெய்ன்ஸ் மற்றும் உடல் ஊனமுற்ற வீரர் பானே லோம்பார்ட் ஆகியோர் இவர்களில் அடங்குவர்.

இந்த வீரர்கள் அனைவரும் உலகக் கிண்ண ஆரம்ப வைபவத்தில் அணிவகுத்து வருவார்கள்.

போட்டிகளின்போது இவர்கள் வீரர்களுக்குப் பரிசுகளை வழங்குவதோடு கலாசார நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

# மேற்கிந்திய அணிக்கு ஜேக்கப்ஸ் தலைவர்

பங்களாதேஷ் சுற்றுலாவுக்கான மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணிக்கு ரிட்லி ஜேக்கப்ஸ் தலைமை தாங்கவுள்ளார்.

மேற்கிந்திய அணியின் தலைவர் கார்ல் ஹூப்பருக்கு முழங்கால் உபாதைக்காக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. இதனால் பங்களாதேஷ் சுற்றுலாவில் அவர் பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷுடன் மேற்கிந்திய அணி 2 டெஸ்ட் போட்டிகளிலும் 3 ஒரு நாள் போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளது. முதலாவது ஒரு நாள் போட்டி நவம்பர் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மேற்கிந்திய அணி விவரம்: ரிட்லி ஜேக்கப்ஸ் (தலைவர்), சிவ்நாரின் சந்தர்போல், பெட்ரோ கொலின்ஸ், கொரி கொலிமோர், மேர்வின் டிலோன், வாஸ்பொர்ட் ட்ரக்ஸ், டெரன் கங்கா, கிறிஸ்கைல், வவெல் ஹிண்ட்ஸ், ஜேர்மைன் லோசன், மஹேந்திரா நகமூட்டோ, டொான் பொவெல், ரிக்கார்டோ பொவெல், மார்லன் சாமுவேல்ஸ், ராம் நரேஷ் சர்வான். (ம-5)

# மீண்டும் மோதலுக்கு தயாராகிறார் டைசன்

முன்னாள் அதிபார குத்துச் சண்டை சம்பியன் மைக் டைசன் மீண்டும் போட்டியொன்றில் பங்குபற்றவுள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி 22ஆம் திகதி கிளி'.போர்ட் எட்டைனுடன் மைக் டைசன் மோதவுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் உலகக் குத்துச்சண்டை கவுன்சில் (டபிள்யூ.பி.ஏ.), சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனம் ஆகியவற்றின் சம்பியன் பட்டங்களுக்கான போட்டியில் லெனொக்ஸ் லூயிஸிடம் தோல்வியுற்றார் டைசன்.

அதன்பின் முதற்றடவையாக கிளி'.போர்ட் எட்டைனுடன் அவர் மோதவுள்ளார்.

கறுப்புக் காண்டாமிருகம் என வர்ணிக்கப்படும் எட்டைன், இதுவரை 26 போட்டிகளில் பங்குபற்றி 24 போட்டிகளில் வென்றுள்ளார். ஒரு போட்டியில் தோல்வியுற்றார். கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற தென்னாபிரிக்காவின் பிரான்சிஸ் போத்தாவுடனான போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

தற்போது எட்டைன், சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் (ஐ.பி.ஏ.) சம்பியன் பட்டத்தைக் கொண்டுள்ளார்.

அமெரிக்காவின் மெம்பிஸ் நகரில் டைசன் - எட்டைன் போட்டி நடைபெறவுள்ளது. இதேவேளை, லெனொக்ஸ் லூயிஸ் உலகக் குத்துச்சண்டை கவுன்சில் பட்டத்திற்காக விட்டாலி கிளிட்ச்கோவுடன் மோதுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-5)


YOGI HOME SCIENCE ACADEMY

**Pastry Demonstration Class**

பேஸ்ரி செய்முறை விளக்கங்கள் வகுப்பு ஒரு நாள் மட்டும்.

**24.11.2002** ஞாயிறு காலை **10** மணிமுதல் ஒரு மணிவரை

1. Paff Pasty
2. Short Crust Pastry Pies
3. Choux Pastry
4. Pizza

75, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(10855) (நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)


# மரண அறிவித்தல்கள்

## அப்பாசாமி ஐயர் அண்ணாசாமி ஐயர்

துன்னாலை வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த அப்பாசாமி ஐயர் அண்ணாசாமி ஐயர் கடந்த (21.11.2002) வியாழக்கிழமை இரவு இறைபதமெய்தினார்.

அன்னார் லட்சுமி அம்மா (நல்லம்மா)வின் அன்புக் கணவரும் திருமதி சந்தணம்மா (சுன்னாகம்) அப்பாசாமிக் குருக்கள் (அல்லைப்பிட்டி), பத்மாவதி அம்மா, சதாதேவி அம்மா, பிறேமச்சந்திரக் குருக்கள் ஜே.பி., தெய்வேந்திரக்குருக்கள் (ஜேர்மனி), ரவீந்திரசர்மா, ஜெயகௌரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி நாகரத்தின அம்மா, தெட்சணாமூர்த்தி ஐயர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தசாமி ஐயர், அமிர்தகௌரி, பவானந்த சர்மா, ஸ்ரீதரக்குருக்கள், உமா, விமலேஸ்வரி (ஜேர்மனி), இந்திரா, காலஞ்சென்ற இராமகிருஷ்ணக்குருக்கள் ஆகியோரின் அருமை மாமனாரும் மோகனசர்மா (சுவிஸ்), யசோதரக் குருக்கள் (கொழும்பு), சந்திரவதனா (ஜேர்மனி), சுதாகரசர்மா (சுன்னாகம்), பிரபாகரசர்மா (ஜேர்மனி), மதிவதனா, கணநாதசர்மா, கானப்பிரியா, ஷயங்கரியா (ஜேர்மனி), சாரங்கி, நர்த்தனன், பார்க்கவி, சாருகாசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2002) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு துன்னாலையில் நடைபெற்று பூதவுடல் கியான் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.பிறேமச்சந்திரக் குருக்கள் J.P.
(மகன்)

*துன்னாலை வடக்கு,*
*கரவெட்டி.*
(சி-25032)

## திருமதி சத்தியலிங்கம் பத்மமாலினி

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியலிங்கம் பத்மமாலினி நேற்று (22.11.2002) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் சத்தியலிங்கத்தின் அன்பு மனைவியும் சாலினியின் அன்புத் தாயாரும் கோவளம் பத்மநாதன் - காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்பு மகளும் சந்தம்புளியடி காலஞ்சென்ற இராசையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*9/2, உடையார் லேன்,*
*ஐயனார் கோயிலடி,*
*வண்ணார்பண்ணை.*
(10891)

தகவல்:
பத்மநாதன்
(தகப்பனார்)


# குடும்பப் புனர்வாழ்வு நடுவகப் பணியகம்

## யாழ்ப்பாணத்தில் வெற்றிடங்கள்

ஆயுதமேந்திய போராட்டத்தினால் பாதிப்படைந்தோருக்கு அரசியல், சமய இனப்பாகுபாடற்ற ஆற்றுப்படுத்தல், வைத்திய மற்றும் மனிதாபிமான சேவைகளை யாழ்ப்பாண நடுவகத்தில் வெளிநாட்டு உதவியுடன் வழங்கும் அரசசார்பற்ற நிறுவனமொன்று,

ஆகக் குறைந்த கல்வித் தராதரமான க.பொ.த. (சா.த.) பல் சித்தியடைந்தும் ஆங்கிலம், தமிழ்மொழிகளில் இலகுவாகப பணியாற்றக் கூடிய தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

அ) மாவட்ட ஆற்றுப்படுத்தலாளர் (ஒரு இடம்)
மேலதிகத் தகைமைகள் (i) ஆற்றுப்படுத்தலில் கணிசமான பயிற்சி
(ii) ஆற்றுப்படுத்தலில் அனுபவம்

ஆ) வெளிக்கள அலுவலர் (இரு இடங்கள்)
மேலதிகத் தகைமைகள் (i) சமூக சேவைகளில் அனுபவம் - சமூக சேவைகளில் பயிற்சியுள்ளமை சாதகமானது.

★ சம்பளம், தகைமைகளுக்கேற்றவாறு பேசித் தீர்க்கலாம்
★ நற்சாட்சி வழங்கக்கூடிய உறவினரல்லாத இருவரின் பெயர்கள், முகவரிகளுடன் சான்றுப் பத்திரப் பிரதிகளுடன், சுயவிவரக் கோவையுடனான விண்ணப்பங்களை பதிவுஅஞ்சல்மூலம் 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**CHAIRMAN**
*SENIOR MANAGEMENT COMMITTEE*
*FAMILY REHABILITATION CENTRE*
*73, GREGORY'S ROAD,*
*COLOMBO- 07.*
(C/25023)

# அரசின் ஒரு லட்சத்து 53 ஆயிரம் ஏக்கர் காணிகள் 12 லட்சம் பேருக்கு பகிர்ந்தளிப்பு

## நாடாளுமன்றத்தில் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன

தவறான தகவல்களை வழங்கி அரச காணிகளைப் பெற முயற்சிப்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். ஆகக் குறைந்து ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாத அபராதமும் வழங்கப்படும் எனவும் காணி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

காணி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் பேசும்போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

தற்போது ஒரு லட்சத்து 53 ஆயிரம் ஹெக்டேயர் அரச காணிகள் இருக்கின்றன. அவற்றைக் காணிகளற்ற ஏழைக் கிராமவாசிகளுக்குப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போதைய காணித் திட்டத்தின்படி இக்காணிகள் 12 லட்சம் பேருக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

காணிகளைப் பெறவிரும்புபவர்கள் தமக்கு எவ்விதமான காணிகளும் இல்லை என்பதை, தமது பிரதேச கிராமசேவகர்கள்மூலம் சத்தியக் கடதாசிகளை ஒப்படைக்கவேண்டும்.

இதுவிடயத்தில், பொய்யான தகவல்களைச் சமர்ப்பிப்பவர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவர். அவர்களுக்கு ஒரு வருட கடூழியச் சிறையும் பத்தாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்படும்.

தற்போது நீதிமன்றத்தின்முன் உள்ள வழக்குகளில் 80 வீதமான சிவில் வழக்குகள் காணித்தகராறு தொடர்பான திருத்தச் சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திருத்தச் சட்டங்கள் அடுத்த ஆண்டின் ஜனவரியில் நடைமுறைக்கு வரும்.

முன்னாள் காணி அமைச்சர் காலஞ்சென்ற ஹெக்டர் கொப்பேகடுவவினால் கொண்டுவரப்பட்ட காணி உச்சவரம்புச் சட்டம் வரவேற்கத்தக்கது. 50 ஏக்கர் காணிக்கு மேல் வைத்திருக்க முடியாது - என்றார்.




சம்பந்தமானவை. அதேவேளை - 60 வீதமான கிரிமினல் வழக்குகளும் காணிகளுடன் தொடர்புடையனவாகவே இருக்கின்றன.

இப்படியான காணித் தகராறுகளைத் தீர்ப்பதற்கு இலகுவாக காணிப்பாவனை, காணி உரிமை

இதன்படி உபயோகப்படுத்தப்படாமல் இருக்கும் காணிகளும் சுவீகரிக்கப்பட்டு, காணியற்றவர்களுக்கு வழங்கப்படும் - இப்படி அமைச்சர் கூறினார். (எ)

# யுத்தங்கள் மூளுவதற்கே காணிகள்தான் காரணம்

## திருமலை எம்.பி. திடீர் தௌபீக்

யுத்தம் ஒன்று ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணிகளாக இருப்பது காணி உரிமைதான். பலஸ்தீனமாக இருந்தாலும் சரி, வடக்கு - கிழக்கு மாகாணமாக இருந்தாலும் சரி மோதல்களுக்கு இதுவே மூலகாரணம். எனவே, காணிப்பிரச்சினை மனிதாபிமானத்துடனும் நியாயமான வகையிலும் தீர்க்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் திருகோணமலை மாவட்ட எம்.பியான திடீர் தௌபீக்.

காணி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தில் பேசும்போதே இதனை அவர் கூறினார்.

தொடர்ந்து பேசிய திடீர் தௌபீக் எம்.பி. மேலும் கூறியதாவது:-

வடக்கில் இருந்து 24 மணிநேரத்தில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். அதேபோன்று கிழக்கு மாகாணத்தில் இருந்தும் தமிழர்களும் முஸ்லிம்களும் இடம்பெயர்ந்துள்ளனர்.

இப்பொழுது இடம்பெயர்ந்தவர்கள் மீண்டும் அவர்களுடைய சொந்த இடங்களில் குடியேற விரும்புகின்றனர். எனவே, அவர்களுக்குரிய காணிகள் மீண்டும் அவர்களுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதேபோன்று, திருகோணமலை மாவட்டத்தில் பல வருடங்களாக விவசாயம் செய்துவரும் விவசாயிகளுக்குக் காணி உறுதிகள் வழங்கப்படவில்லை. திருகோணமலை மாவட்டத்தில் காணிக் கச்சேரிகளை நடத்தி இப்பிரதேச மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கவேண்டும் - எனவும் திடீர் தௌபீக் எம்.பி. கோரிக்கை விடுத்தார். (எ)

# பாடசாலைகள், வீடுகள் கட்டுவதற்கு காணிகள் வழங்கப்படவேண்டும்

## சந்திரசேகரன் வற்புறுத்து

பெருந்தோட்டத் தமிழ் பாடசாலை அபிவிருத்தித் திட்டங்களுக்கும், தொழிலாளர்களின் வீடமைப்புக்கும், இளைஞர் சுயதொழில் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் தோட்டக் காணிகளை வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும். தோட்டங்களில் மீள் நடுகை ஆரம்பிக்கப்படுவதற்கு முன் இதற்கான காணிகள் ஒதுக்கப்படவேண்டும் என சமூக அபிவிருத்தி அமைச்சர் பெ.சந்திரசேகரன் கடந்த புதனன்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

பெருந்தோட்டத் துறைகள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தின்போதே அமைச்சர் சந்திரசேகரன் இப்படிக் குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து பேசிய அமைச்சர் சந்திரசேகரன் மேலும் கூறியதாவது:-

இன்று மலையகத்தில் வேலையில்லாப் பிரச்சினை ஒரு பெரிய அச்சுறுத்தலாக இருக்கின்றது.

எனவே, தோட்டங்களுக்குள் பத்து முதல் பதினைந்து ஏக்கர் காணிகளை ஒதுக்கி, சுயதொழில், பண்ணை அபிவிருத்தி என்பனவற்றை உருவாக்கினால் அதன்மூலம் தோட்டத்திற்கும் ஆதாயம் கிடைக்கும்; இளைஞர்களுக்கும் தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும்.

சீடா நிறுவனம் தோட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய உதவுகின்றது. ஆனால், கம்பனிகள் காணிகளை வழங்கமறுக்கின்றன. எனவே, பாடசாலை அபிவிருத்திக்கு அமைச்சர் காணிகளைப் பெற்றுத் தரவேண்டும்.

ஜனாதிபதியும்கூட தோட்டத் தொழிலாளர்களுக்குத் தனித் தனியான வீடுகளை அமைக்கவேண்டும் என்று காணிகளையும் வழங்கினார். ஆனால், இப்பொழுது தனித்தனியான வீடுகளை அமைக்க கம்பனிகள் காணிகளை வழங்க மறுக்கின்றன. எனவே, அமைச்சர் இவ்விடயத்தில் அக்கறை காட்டி தேவையான காணிகளை வழங்கவேண்டும். சமூக அபிவிருத்தி அமைச்சு பெருந்தோட்ட அபிவிருத்திக்காகப் பல வேலைத் திட்டங்களை வகுத்துள்ளது.

அதேவேளை, வெளிநாட்டு நிதி உதவிகள் மூலம் உருவாக்கப்பட்டிருக்கும் பெருந்தோட்ட மனிதவள நிதியத்தையும் சமூக அபிவிருத்தி அமைச்சுடன் ஒன்றிணைந்து செயற்பட ஆவனசெய்யவேண்டும்.

விசேடமாக மத்திய மலைநாட்டில் கூடுதலான தமிழ் உறுப்பினர்கள் இருக்கின்றனர். அங்கே கூடுதலான நிதி தமிழ்த் தொழிலாளர்களுக்குக் கிடைக்கிறது. அதேவேளை, தென் பகுதியிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு அப்பிரதேச உறுப்பினர்களின் உதவிகள் கிடைப்பதில்லை. எனவே, தென்பகுதியில் வாழும் தோட்டத் தொழிலாளர்களுக்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் பரவலாக்கப்படவேண்டும்- இப்படி அவர் கூறினார். (எ)

# மலையக அபிவிருத்திக்கு ஐந்தாண்டுத் திட்டம்

## அமைச்சர் சந்திரசேகரன்

மலையக சமூகத்தின் அபிவிருத்திக்காக பாரிய ஐந்தாண்டுத் திட்டம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கல்வி, சுகாதாரம், பொருளாதார அபிவிருத்தி என மூன்று பிரிவுகளாக அபிவிருத்தித் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது என்று சமூக அபிவிருத்தி அமைச்சர் பெ.சந்திரசேகரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

அமைச்சின் நடவடிக்கைகளைப் பற்றிய உண்மையை அறிந்துகொள்ளாமல், அமைச்சர் என்ன செய்துவிட்டார் என்று கேள்வி எழுப்புவது விதண்டாவாதமானது என்றும் - எதிரணியினரின் குற்றச்சாட்டுக்களை நிராகரித்தார் அமைச்சர் சந்திரசேகரன்.

அவர் தொடர்ந்து பேசுகையில்-

எனது அமைச்சின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், சமூக அபிவிருத்தி அதிகாரசபையின்மூலம் செயற்படுத்தப்படும். தோட்டங்கள் தோறும் ஆயிரத்துக்கும் அதிகமான சமூக அபிவிருத்தி மன்றங்கள் அமைத்து, அவை ஒன்றிணைக்கப்பட்டு அதிகாரசபையின்கீழ் செயற்படுத்தப்படும் என்றார். (எ)

# வாசகர் திருமுகம்

## பிறப்பு, இறப்பு, திருமணச்சான்றிதழ்; உதவிப்பதிவாளர் நாயகம் விளக்கம்!

கடந்த 18.11.2002 ஆம் திகதிய 'உதயனின்' வாசகர் திருமுகம் பகுதியில் 'பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் தேவை' என்ற தலைப்பில் வெளியான திருமுகம் குறித்து பின்வரும் விளக்கத்தை அளிக்கின்றேன்.

மேற்படி திருமுகத்தில் குறிப்பிடப்பட்ட - ஆங்கில மொழிபெயர்ப்புப் பிரதி வழங்கும் நடைமுறை ஏற்கனவே இருந்து வருகின்றது.

மொழிபெயர்ப்புக்குரிய ஆவணங்களுடன் ரூபா 70 பெறுமதியான முத்திரையைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் யாழ்.செயலகத்தில் இயங்கும் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களின் ஆங்கில மொழி பெயர்ப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

ந.சதாசிவ ஐயர்
*உதவிப் பதிவாளர் நாயகம்,*
*யாழ்ப்பாணம்.*

## ஆனையிறவில் மீளக்குடியமர எமக்காக குரல்கொடுப்பது யார்?

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக ஆனையிறவு, உமையாள்புரம், தட்டுவன்கொட்டி, ஊரியான், நாவற்கொட்டி போன்ற கிராமங்களில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து இன்று வரை வேறு பல இடங்களில் பலர் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் காரணமாக பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி, வலிகாமம் போன்ற இடங்களில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். இராணுவம் நிலைகொண்ட இடங்களில்கூட மக்களை மீளவும் குடியமர்த்துவதற்கு பொது அமைப்புக்களும் அரசஅதிபரும் அரசசார்பற்ற நிறுவனங்களும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசுடன் பேச்சு நடத்தி மீள்குடியமர்வுக்கு நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

ஆனால், 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து இன்று 12 வருடங்களாக தொழில் இழந்து - வீடு இழந்து, சொத்துக்கள் இழந்து வேறு ஒருவருக்கு சொந்தமான வீட்டுக் காணிகளிலும் நலன்புரி நிலையங்களிலும் பல கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்துவரும் ஆனையிறவு மக்களைப் பற்றி அரச அதிபரோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ, பொது அமைப்புகளோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ சிறிதளவேனும் சிந்திக்காமல் விட்டுவிட்டதேன்?

செயலகத்துக்கு முன்னாலும் வீதிகளிலும் போராட்டம் நடத்தினால்தான் இவர்கள் வாக்குறுதி தருவார்களோ. அல்லது இக்கிராமமக்களும் இருக்கின்றார்கள் என்ற ஞாபகம் வருமோ. இனியாவது மேற்படி கிராம மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

*ஆனையிறவு* - பாதிக்கப்பட்டவர் -

## சாவகச்சேரிக்கு மின்சாரம் எப்போது?

யாழ்ப்பாணத்தின் 2ஆவது பெரிய நகரமாக விளங்குவது சாவகச்சேரி. 2000ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இந்நகரம் பலத்த யுத்த அழிவுகளைச் சந்திக்க நேரிட்டது. ஆனால், தற்போது அது மீண்டும் புதுப்பொலிவு பெற்றுவருகிறது. நகரப்பகுதியிலும், நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும் மக்கள் கணிசமான அளவில் மீளக்குடியமர்ந்து விட்ட நிலையில் அவர்கள் மின்சாரம் இன்றி இருளில் வசிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதைவிட சாவகச்சேரி நகரப்பகுதியில் பாடசாலைகள், வங்கிகள் உள்ளிட்ட பல அரச திணைக்களங்களும் மீள இயங்க ஆரம்பித்துள்ள நிலையில் மின்சாரம் இல்லாது பல்வேறு சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

மேலும், சாவகச்சேரி நகரம் யாழ் - கண்டி (ஏ-9) பிரதான வீதியில் அமைந்திருப்பதால் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நகரமாக விளங்குகிறது. ஏ-9 பாதையில் சாவகச்சேரி யாழ்ப்பாணத்தின் வரவேற்பு நகரமாகவும் விளங்குகிறது. தென்பகுதியில் இருந்து வரும் மக்களில் பலர் இந்நகரிலேயே தங்கி யாழ்நகரை அடைகின்றனர்.

எனவே, இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நகருக்கு உடனடியாக மின்சாரம் வழங்க மின்சாரசபையோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ நடவடிக்கை எடுக்கவேண்டும்.

*சாவகச்சேரி* - *சீலன்* -

# அரச குழு இன்று நோர்வே பயணம்

நாளை மறுதினம் திங்கட்கிழமை நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் ஆரம்பமாகும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பங்குபற்றும் அரச பிரதிநிதிகள் இன்று நோர்வேக்குப் பயணமாகவுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்தக் குழுவில் அமைச்சர்கள் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோரும் அடங்கியிருப்பர்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றவுள்ள விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரும் அரசியல் ஆலோசகருமான அன்ரன் பாலசிங்கம் லண்டனில் இருந்து நேரடியாக நோர்வே செல்வார் என்று தெரிகின்றது. (ம-12)

# விஞ்ஞான, கணித பாட அறிவு யாழ்.மாணவரிடையே வீழ்ச்சி!

## உதவிக் கல்விப் பணிப்பாளர் கவலை

கல்லூரி தரத்திலான பாடசாலைகளில் பயிலும் மாணவர்களிடை விஞ்ஞான, கணித பாட அறிவு மட்டம் வீழ்ச்சி கண்டிருப்பதாக வலிகாமம் கல்வி வலய விஞ்ஞான, கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கவலை தெரிவித்தார்.

அண்மையில் வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளிடையே தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்பட்ட விஞ்ஞான, கணித போட்டி முடிவுகள் மூலம் இதனைக் கண்டு கொள்ளமுடிகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி பாடங்களுக்குத் தேவையான ஆசிரிய ஆளணியின் போதிய அளவு இருந்தும்கூட மாணவர்களின் கல்வித் தரம் பெரிய பாடசாலைகளில்கூட வீழ்ச்சியடைந்திருப்பது கவலைக்குரியதென அவர் குறிப்பிட்டார்.

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள தரம் இரண்டைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் பெற்றிருக்கும் அறிவை கல்லூரித் தரத்திலான மாணவர்கள் பெறத்தவறிவிட்டனர் எனவும்

எதிர்காலங்களில் இக்குறைபாட்டை நீக்கி, விஞ்ஞான, கணிதபாட அறிவு மட்டத்தை உயர்த்த சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் ஊக்கம் எடுக்கவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார். (ஒ-132)

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக! உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே! என் வாழ்வில் எச்சந்தர்ப் பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமானவையாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லாத மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன்.

*ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி.*

(C/25034) - பக்தை -



*NADESAPILLAI SRITHARAN*



*(A man of Peace Who Walked Through Life with Charity to all and Malice Towards None)*

*Our Deepest Sympathies To Family Members*

**ARUN SPORTS SPOT**

Jaffna.

(C/25033)


## மயங்கி விழுந்த யுவதி மரணம்!

தென்மராட்சி,நவ.23

வீதியில் நடந்து சென்ற இளம் யுவதி மயங்கி வீழுந்து மரணமான சம்பவம் கடந்த புதனன்று மீசாலை அல்லாரைப் பகுதியில் இடம்பெற் றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த மகா லிங்கம் விஜிதா (வயது 21) என்ப வரே மரணமானவராவார்.

இவரது சடலம் விசாரணைகளுக் காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது.

(எ-117)

## வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்ட மும இணைந்து வழங்கிவரும் திரைப் படக் காட்சித் தொடரில் மார்டின் ஸ்கொர்சே இயக்கிய 'கிறிஸ்துவின் கடைசித்தவிப்பு' (த லாஸ்ட் டெம் டேசன் ஒவ் கிறிஸ்ட்) எனும் திரைப் படம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம் என புறநிலைப் படிப் புகள் அலகின் இணைப்பாளர் தெரி விக்கின்றார்.

## மஞ்சந்தொடுவாயில் கடை ஒன்று தீக்கிரை!

காத்தான்குடி,நவ.23

மட்டக்களப்பு மாநகரசபைப் பிரி வின் மஞ்சந்தொடுவாய் பிரதான வீதி யிலுள்ள வர்த்தக நிலையமொன்று இனந்தெரியாத நபர்களினால் தீக் கிரையாக்கப்பட்டுள்ளது.

இதனால், சுமார் 26 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து சாம்பராகியுள்ளன என்று கடை உரி மையாளர் காத்தான்குடி பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார். நேற்று அதிகாலை ஒரு மணியளவிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக உரிமையாளர் தெரிவித்தார். காத்தான் குடி பொலீஸார் தீவிர விசாரணை களை நடத்தி வருகின்றனர். (ஒ)


## துயர் பகிர்கின்றோம்

யாழ்.றோட்டறிக் கழக
மூத்த தலைவர்
Rtn. ஈ.சரவணபவன்
அவர்களின் அன்பு மைத்துனரும்
Ann. யசோதை சரவணபவன்,
இந்நாள் தலைவர்
Rtn. ந.வித்தியாதரன்
ஆகியோரது
அருமை சகோதரருமான



### நடேசபிள்ளை ஸ்ரீதரன்

அவர்கள் லண்டனில் காலமான செய்திகேட்டு மிகவும் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.

உங்களது பேரிழப்புக்கு எமது ஆறுதல் வார்த்தைகள் எவ்வளவு பலவீனமானதும் பயனற்றதென்பதும் நாம் நன்கு உணர்கின்றோம். எனினும், அன்னார் உயிரோடு இருந்த காலத்தில் உங்களுக்கு ஆற்றிய சேவைகள் தொக்கிநின்று வழி நடத்தும் என்பதை நினைத்து சற்று ஆறுதல் அடைவீர்களாக!

- யாழ். நகர் மைய றோட்டரக்ட் கழகத்தினர் -

(C/25035)


# கேள்வி அறிவித்தல்

## மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம்.

01. இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசினது மனித வள அபிவிருத்திக் கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள இடைக்காலக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் செலவுகளை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

02. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும், கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் இக்ராட் நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்டதும், கீழ்க்குறிப் பிடப்பட்டுள்ள தரத்தை உடையவர்களும் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தை உடையவர் களுமான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் வேலைக்கான மூடிய கேள்விகள் கோரப்படு கின்றன. கேள்விகள் 2002.12.05ஆம் திகதி மு.ப.10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் மு.ப.10.30 மணிக்கு கேள்வி அறிவித்தல் பெட்டி திறக்கப்படும். அத்தருணம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுக மளிக்கலாம்.

| பாடசாலையின் பெயர் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|
| யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை. | 500.00 | 18,230.00 |

புதிய கட்டடம் இரண்டு பகுதி கொண்ட க.பொ.த. உயர்தர வகுப்புக்குரிய விஞ்ஞான ஆய்வு கூடம் 20.4X6.0m

03. கேள்விப் பத்திரங்களை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனை பொறியியலாளர் அலுவலகத்தில் 2002.11.25ஆம் திகதியிலிருந்து 2002.11.29ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

04. கட்டட நிர்மாண வகுப்பில் தரம் எம் 8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் உள்ளவர்களிடம் இருந்து புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகம் ஏற்றுக்கொள்ளப்படும்.

05. கேள்விதாரர் ஒருவர் கேள்விப் பத்திரம் ஒன்றைமட்டும் பெறுவதற்குத் தகுதியுடையவராவார். தங்களின் கட்டட நிர்மாண வகுப்பின் இக்ராட் நிறுவன நிழல் பிரதிக் கேள்வியுடன் இணைத்தல் வேண்டும்.

06. அ. கேள்விப் பத்திரங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியுடன் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப்படிவமும் இறப்பர் முத்திரையிடப்பட்டு கையொப் பமிடப்படவேண்டும். இவற்றுடன் கேள்விப்பத்திர இணைப்பிரதியையும் தனித்தனி இரு கடித உறைகளில் இடப்பட்டு கடித உறைகளின் இடது மேற்பக்கத்தில் கட்டட வேலைகளின் விவரமும் எழுதப்படல் வேண்டும்.

ஆ. தனித்தனியே இரு கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் ஒரு பெரிய கடித உறையில் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரையிடப்பட்டு **"தலைவர், கேள்விச் சபை, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப் பாணம்"** என விலாசமிட்டு, கேள்வி ஆவணங்களை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் 2002.12.05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் இடப்படவேண்டும். பிந்திய கேள்விப் பத்திரங்கள் எத்தகைய கார ணங்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இ. தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர் ஒப்பந்தம் செய்யப்படும் திகதியிலிருந்து மூன்றுமாத காலத்திற்குள் வேலையை முடிவுற்று கையளிக்கப்படவேண்டும்.

ஈ. கேள்வி ஆவணங்கள் சரியாக நிரப்பப்படாத, சரியாக இணைக்கப்படாத கூட்டல், கழித்தல் பிழைகள் உள்ள, தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

உ. இக்கேள்விக்கான பணத்தை கேள்வியாளர்கள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனை பொறியியலாளரிடம் தங்கள் தகைமைகளை எழுத்துமூலம் சரிபார்த்து அனுமதி பெற்று பணத்தை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வங்கிக் கணக்கில் வரவு வைத்து பின்பு பற்றுச்சீட்டை பொறியியலாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

ஊ. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன், மேலதிக விவரங்களையும் பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
பணிமனை,
*செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.*

ஒப்பம்: திரு. வீ.இராசையா
மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(சி-25030)


## கண்ணீர் அஞ்சலி

99'A' பிரிவு தாதிய உத்தியோகத்தர்
செல்வி இ.விஜிதாமதி அவர்களின் சகோதரர்

### இ.தினேஸ்குமார்

அவர்களின் திடீர் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்துக்கொள்கிறோம்.

99'A' பிரிவு
தாதிய உத்தியோகத்தர்கள்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(10896)



## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
07 - 07 - 1929



மறைவு
11 - 12 - 1995

### அமரர் தம்பு சேனாதிராயர்

(இளைப்பாறிய பிரதி அதிபர், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி)

*திதி :* 23.11.2002

*அன்பினால் எம்மை ஆண்டு*
*அகிலத்தில் முந்தி இருக்கச் செய்த*
*கண்ணவி பொய்படும் வதனம் வாடி*
*ஆண்டு ஓர் ஏழும் ஆனதன்றோ?*

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும்

*செல்லவளவு,*
*முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னாகம்.*

- குடும்பத்தினர்.

(10895)



## மரண அறிவித்தல்

### திருமதி சோமசுந்தரம் மகேஸ்வரி

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் மகேஸ்வரி அவர்கள் 21.11.2002 வியாழக்கிழமை இந்தி யாவில் காலமானார்.

அன்னார் சோமசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் யோகராசா ஆகியோரின் அன்புத்தாயாரும் ராகினியின் மாமியாரும் உமேஸ், மதுரா, கோசலா ஆகியோரின் பேர்த்தியும் முன் னாள் செனட்டரும் சமாதான நீதிவானுமாகிய நீதிராசா, பிரபல வர்த்தகர் விஜயரட்ணம் (கொழும்பு), காலஞ்சென்ற இராஜரட்ணம் ஆகியோரின் அன் புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நீதிராசா வீதி,*
*கொக்குவில்.*

தகவல்:
Dr.பொ.பரமலிங்கம் J.P.
(பெறாமகன்)

(10899)





நிதர்சனம் நிறுவனத்தால் இசைப்பிரியனின் இசைநெறியாள்கையில் உருவான 'கல்லறை தழுவும் கானங்கள்' ஒலிப்பேழை வெளியீட்டு விழா நேற்று யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் போராளி பூமா பொது ஈகச்சுடர் ஏற்றுவதையும், புலிகளின் யாழ். மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் நிசாந்தன் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றுவதையும், சிறப்பு எல்லைப்படை மாவீரர் அன்புவின் தாயார், கடற்கரும்புலி கப்டன் சுதாகரின் தந்தை ஆகியோர் ஈகச்சுடர் ஏற்றுவதையும்

ஒலிநாடாவின் முதற் பிரதியை நிஷாந்தனிடமிருந்து இசையமைப்பாளர் கண்ணன் பெறுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள் - ரமணன்)*

# இன்று பாதுகாப்பு உபகுழுவின் அம்பாறை மாவட்டக் கூட்டம்

பாதுகாப்புத் தொடர்பான உப குழுவின் அம்பாறை மாவட்டக் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும் இக்கூட்டம் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் கார்ள் தலைமையில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகளின் சார்பில் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல துறைப் பொறுப்பாளர் கௌசல்யன இராணுவத்தளபதி ரி.ரமேஸ், அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவா, இராணுவத்தளபதி ஜனார்த்தனன், மகளிர் அணித் தலைவி சீதா, இணைப்பாளர் காந்தன் ஆகி யோர் கலந்து கொள்வர்.

அரச தரப்பில், மேஜர் ஜெனரல் சாந்த கோட்டே கொட, சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் எம்.ஏ.மஜீத், அதிரடிப்படைப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் நிமால் லியுக்கே உட்படப் பலர் கலந்துகொள்வர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களான இரா.சண்முகநாதன், ஆ.செளந்தரராஜா, மெல்வின் விஜேசேகர, ஏ.ஆர்.ஏ.அசீஸ் ஆகியோருடன் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் எல்.எஸ்.சி.ஸ்ரீவர்த்தனவும் கலந்துகொள்வார்.

பொது இடங்களிலும் தனியார் வீடுகளிலும் நிலை கொண்டுள்ள படையினரின் வெளியேற்றம், தொழிலுக்காக காத்திருக்கும் பட்டதாரிகளின் பிரச்சினை என்பன பேச்சுப் பட்டியலில் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளன.(ஒ)

## பல்கலைக்கழக மாணவருக்கு!

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று சிரமதானப் பணியை மேற்கொள்ளவிருப்பதால் அனைத்துப் பீட மாணவர்களையும் முற்பகல் 10 மணிக்கு மாணவர் பொது அறைக்கு முன்பாக ஒன்று கூடுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ஒ-3)

## மாவட்ட ஹொக்கிஅணி தெரிவுப்பயிற்சி

இலங்கை ஹொக்கி சம்மேளத்தினால் நடத்தப்படவுள்ள 46 ஆவது சிரேஷ்ட தேசிய ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ள யாழ். மாவட்ட அணியை தெரிவுசெய்வதற்கான பயிற்சி இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சிக்கு அழைக்கப்பட்டுள்ள வீரர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கம கேட்டுள்ளது. (ஒ-3)

## கல்விமேம்பாட்டு பேரவையின் பரிசளிப்பு

கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்ட எழுத்துத்திறன் போட்டியில் தேசிய மற்றும் வலய மட்டங்களில் தெரிவுசெய்யப்பட்டவர் களுக்கான பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை மதியம் 12 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

பரிசு பெறுபவர்களை குறிப்பிட்ட நேரத்துக்கு சமுகம் அளிக்கும்படி கல்வி மேம்பாட்டு பேரவையின் யாழ் மாவட்ட செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-3)


## புகைப்படப் பிடிப்பாளருக்கு ஒரு நற்செய்தி

எமது Fuji படச்சுருள் ஒன்று வாங்குவோர் ஐந்து படப்பிரதியாக்கத்துடன்
ஒரு டயறியையும் இலவசமாகப்
பெற்றுக்கொள்ளலாம். அத்துடன், Fuji படச்சுருள்
ஒன்றின் மொத்தவிலை 168 ரூபா மட்டுமே!
மேலும், செரன்டிப் எக்ஸ்பிரசில் உல்லாசப் பயணத்திற்கு
மிக இலகுவாக விமானப் பயணச் சீட்டுக்களை
பெற்றுக்கொள்ள
யாழ். முகவர்
மூர்த்தி வீடியோ அன் எலக்ரோனிக்ஸ்
யாழ் வீதி, மானிப்பாய்
(C/25038) தொலைபேசி : 021-222-2884



## டிப்ளோமா விண்ணப்பப்படிவம்

கணனி, குடிசார், மின்னியல், பொறியியல், உற்பத்தி, நெசவு, இலத்திரனியலும் தொலைத்தொடர்பும், புடைவை இரசாயன செயன்முறை, ஆடை உற்பத்தியும் முகாமைத்துவமும், தொழில்துறை சூழல் அனர்த்தங்கள், Youth in Development Work ஆகிய துறைகளுக்கான விண்ணப்பப்படிவங்களை இலங்கை திறந்த பல்கலைக்கழகம், யாழ். பிராந்திய நிலையம், பிறவுண் வீதி கொக்குவில். 7 நாள்களும் பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி ச.ஆ.ஞானேந்திரன
(இயக்குநர்)
(10901)


ஓம் சாயிராம்

## பிறந்ததின வாழ்த்தும் பாராட்டும்




பகவான் ஸ்ரீ சத்திய சாயியின் பிறந்த நாளாகிய இன்று சங்கரத்தையைச் சேர்ந்த குகராஜன் வசந்தா தம்பதிகளின் **செல்வப் புதல்வன் ராதிகேஷன்** தனது 10ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

இவர் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 144 புள்ளிகளைப் பெற்றமைக்காக அவரைப் பாராட்டுவதுடன், அவர் அன்புத் தங்கை **சனாதனி**யுடன் பத்திரகாளி அம்பாள் அருள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

*"கோகுலன்"*
*சங்கரத்தை, வட்டுக்கோட்டை.* (10897)

அப்பா, அம்மா,
உற்றார், உறவினர்.


## கிராம அலுவலர் (G.S.) தரம் II போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்பு

ஆரம்பம் 24.11.2002 9 a.m.
சனி, ஞாயிறு 9 மணி
கையேடு இங்கே கிடைக்கும்
நியூட்டன்
உயர்கல்வி நிறுவனம்
யாழ்.நகர் (10900)

## லஷ்சுமி இணுவில்

முரளி, பிரதியுக்ஷா, மனோஜ
கடல் பூக்கள்
(ரீல்ஸ்)
காட்சிகள்:10.30, 2.30, 6.30 (ப.நே)
(10903)

## நாகம்ஸ் சுன்னாகம்

விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த
யூத்
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00
விசேட காட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (புதிய நேரம்)
(10887)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், சுவலட்சுமி, மந்திரா நடித்த
லவ் ருடே
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.45, 6.00 (பு.நேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மட்டும்
UNIVERSAL SOLDIER (ஆங்கிலப்படம்)
(C/24617)

## ராஜா யாழ்ப்பாணம்.

12ஆவது வாரம்
அஜித் (இருவேடங்களில்), மீனா நடித்த
வில்லன்
(ரீல்ஸ்)



கா.நே.: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)


# மரண அறிவித்தல்கள்

## சபாரெத்தினம் பாக்கியலெட்சுமி

(பெற்றம்மா)

வேலணை வடக்கைச் சேர்ந்த சபாரெத்தினம் பாக்கியலெட்சுமி (பெற்றம்மா) நேற்று (22.11.2002) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - பொன்னு அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற சபாரெத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்றவர்களான காமாச்சிப்பிள்ளை, நாகம்மா மற்றும் பொன்னுத்துரை, மருதுலிங்கம் ஆகியோரின் சகோதரியும் திருஞானம் (இந்திரன் சிற்றுண்டிச்சாலை வேலணை து.ம.ம.வி.), ஞானசேகரம், ஞானழகன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ராகினி, மாலினி, மகேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் ராதிகா, தர்சிகா, பானுஷா, நவரூபா, நவதீபா, சயந்தன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இராசையா வீதி இல்லத்தில் இன்று (23.11.2002) சனிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

*இராசையா வீதி,*
*வேலணை வடக்கு,*
*வேலணை-5*

தகவல்:
இந்திரன் (மகன்)

(10902)

## திருமதி சபாரத்தினம் வள்ளிநாயகி

(மல்லாகம்)

மல்லாகத்தைச் சேர்ந்த சபாரத்தினம் வள்ளிநாயகி 21.11.2002 அன்று காலமாகிவிட்டார்.

இவர் கோப்பாயைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற அப்பாத்துரை - சரஸ்வதி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைரமுத்தாபிள்ளை - தையல்நாயகி ஆகியோரின் அன்பு மருமகளும் சபாரத்தினத்தின் (ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசன இலாகா) அவர்களின் அன்பு மனைவியும், காந்தீபன் (நீர்ப்பாசனத்திணைக்களம் - கிளிநொச்சி), பிரதீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலாதேவியின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2002) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காங்கேசன்துறை வீதி,*
*மல்லாகம்.*

தகவல்:-
கணவர், பிள்ளைகள்.

(c/25037)

## மார்க்கண்டு பொன்னம்மா

குளமங்கால், மல்லாகத்தைச் சேர்ந்த மார்க்கண்டு பொன்னம்மா நேற்று (22.11.2002) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் பாலர் (வவுனியா), தங்கம் (தேவிபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற நவரட்ணம், நேசமலர், ஞானமலர், நகுலேஸ்வரன், காலஞ்சென்ற விமலேஸ்வரி, காலஞ்சென்ற குகனேஸ்வரி மற்றும் குகனேஸ்வரன், மகாலிங்கம் (பஹ்ரைன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுப்பிரமணியம், நகுலேஸ்வரன் (டோகா), துபிந்னா (வவுனியா) ஆகியோரின் மாமியாரும் ஸ்ரீகாந்தன், ஸ்ரீசாந்தன், ஸ்ரீஜெயந்தன், சுரேஸ், சார்ள்ஸ், பிரகாஷ், நிரோஜன், அனுஷா, டெனிஷன், திலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லக்ஷனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2002) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மல்லாகம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

*குளமங்கால்,*
*மல்லாகம்.*

தகவல்:
மா.நகுலேஸ்வரன் - ராசன
(மகன்)

(C/25040)

## Dr. இராசா ரஞ்சித் ராஜா

*M.B.B.S. (Cey.) F.R.C.S. (U.K.)*

சூளானை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. இராசா ரஞ்சித் ராஜா நேற்று (22.11.2002) வெள்ளிக்கிழமை அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா (பாடசாலை பரிசோதகர்) - சிவனேசம் ஆகியோரின் அன்பு மகனும் பாரதியின் அன்புக் கணவரும் கரிநிரோஜன், வியூசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (சட்டத்தரணி) - சாரதாதேவி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'கோகுலம்'*
*பெரியப்புலம்*
*சுன்னாகம்*

தகவல்:
திருமதி சுதாகரன்
(மாமி)

(C/25039)

# ஒஸ்லோவில் நடக்கும் மாநாடு மற்றொரு 'பொங்குதமிழ்' நிகழ்வு

## வர்ணிக்கிறார் சரத் அமுனுகம

ஒஸ்லோவில் நடைபெறவிருக்கும் சமாதான ஆதரவு மாநாட்டை மற்றொரு பொங்குதமிழ் நிகழ்வு என்று வர்ணித்திருக்கிறார் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம. கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் ஒஸ்லோ மாநாட்டை இப்படி வர்ணித்தார்.

இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் நேருக்கு நேர் இருந்து பேசுவதற்கு அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் சம்மதித்திருப்பது கண்டிக்கத்தக்கது.

அத்துடன் புலிகளின் பிரதிநிதிகள் பங்கு பற்றுகின்ற ஒரு மாநாட்டில பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்வதன் மூலம் அவர் பிரதமர் பத விக்கே இழுக்கு ஏற்படுத்தியுள்ளார் என்றும் சரத் அமுனுகம குறிப்பிட்டார். (ஐ-43)

# பொலீஸாரின் அசமந்தத்தாலேயே மதுரங்குளி மற்றும் காலி மோதல்கள்!

## மேல்மாகாண ஆளுநர் மௌலான குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.23

"புத்தளம், மதுரங்குளி, காலி ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள இனரீதியான மோதல்கள் அல்ல, அவை பொலீஸாரின் அசமந் தப்போக்குக் காரணமாக ஏற்பட்டவை யாகும். தனி நபர்களிடையே ஏற்பட்ட மோதல் களைத் தடுக்காமல் பொலீ ஸார் அவற்றை மேலும் தூண்டி யிருப்பது தெரியவந்துள்ளது - இவ் வாறு நேற்று எதிர்க்கட்சித் தலை வரின் அலுவலகத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலான தெரிவித்தார்.

மேற்படி பகுதிகளில் இடம்பெற்ற கலவரங்கள் தொடர்பாக உடனடி விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கும்படி மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா, ஜனாதிபதியால் பணிக்கப்பட்டிருந்தார். அப் பகுதிக்குச் சென்றுவந்ததை அடுத்தே அவர் பத்திரிகையாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

ஆளுநர் அலவி மௌலான மேலும் கூறியதாவது:-

சிறு பிரச்சினைகளைத் தூண்டி விட்டு ஓர் இனரீதியான கலவரமாக்க சில விஷமிகள் ஈடுபட்டுள்ளனர். இப படியான சம்பவங்கள் இடம்பெறும் போது பொலீஸார் உடனடி நடவடிக்கை மேற்கொண்டால் பாரதூரமான நிலைமைகள் உருவாகாமல் தடுக்கலாம். காலியில் சைக்கிளில் சென்ற மொஹமட் என்ற இளைஞன் மீது எவ்வித காரணமுமின்றி துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கலவரங்களால் சாதாரண ஏழைக்குடும்பங்களே பாதிக்கப் பட்டுள்ளன. புத்தளத்தில் அகதிகளாக எவ்வித நிவாரணமும் அற்ற ஏழைக்குடும்பங்கள் வீதியில் நிற்க வேண்டிய அவலம் உருவாகியுள்ளது. இதில் பாதிக்கபட்ட அனைவருக்கும் நஷ்டஈடு வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இவ்வாறு அவர் சொனனார். (ஒ)


### விசேட சிங்கள வகுப்புகள்

சிங்கள மொழிமூலம் கல்விகற்ற பல வருட கற்பித்தலில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர் ஒருவரினால் முதல்முறையாக Visual Study System முறைமூலம் சிங்களம் அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படவுள்ளது. சிங்களக் கல்வியை அடிப்படையில் இருந்து பயில விரும்புவோர் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

IPAS
*199, Main Street, Jaffna.*
Office Hours
Sat. & Sun. 9.00-5.00
(C/25017)


# முன்னாள் இயக்க உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கத் திட்டம்

கொழும்பு,நவ.23

தமிழ் இயக்கங்களின் முன்னாள் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் திட்டம் ஒன்றினை சர்வதேச தொழிலாளர் நிறுவனம் செயற்படுத்தவுள்ளது.

இது குறித்து சர்வதேச தொழிலாளர் ஒன்றியம் ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ்அணி) செயலாளர் நாயகம் சுரேஷ்பிரேமச்சந்திரன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தியது.

இந்த இயக்கங்களின் முன்னாள் உறுப்பினர்களுக்கு கணனிப்பயிற்சி மற்றும் முறைசாராக் கல்வி என்பன வழங்கப்படும். அவர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களும் பெற்றுக் கொடுக்கப்படும். இவ்வாறு சர்வதேச தொழிலாளர் ஒன்றியம் தெரிவித் துள்ளது.

இதேவேளை இந்தத் திட்டத்தில் ஈபிடிபி உறுப்பினர்களையும் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

### குடத்தனையில் 10ஆயிரம் சவுக்குமரம் நடுகை செய்யப்படும்

வடமராட்சிகிழக்கு,நவ.23

குடத்தனை, மணற்காட்டுப் பகுதிகளில் 10ஆயிரம் சவுக்கு மரக்கன்றுகள் நாட்டப்படவுள்ளன.

இதற்கான சவுக்கு மரக்கன்றுகள் மணற்காட்டுப் பகுதியில் நாற்று மேடைகள் அமைக்கப்பட்டுப் பேறப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கம் இதற்கான நடவக்கையினை மேற்கொண்டுள்ளது. (எ-182)

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் வரையறைகளுக்கு உட்பட்ட விடயங்களில் மட்டுமே கண்காணிபபுக் குழு தலையிடமுடியும் என்றும் -

குடாநாட்டில் தற்போது உருவாகியிருக்கும் நெருக்கடிக்கு கண்காணிப்புக் குழுவால் தீர்வுகாண இயலாது என்றும் -

ஜெனரல் புருகோவிட் சுட்டிக் காட்டினார் என்று கூறப்படுகிறது.

ஜனநாய ரீதியில் பதிவு செய்யப்பட்ட சகல அரசியல் கட்சிகளினதும் சுயாதீனமான செயற்பாடுகளுக்கு குந்தகம் ஏற்பட இடமளிக்கக்கூடாது என்று பாதுகாப்புத் தரப்பினரிடம் வற்புறுத்திய ஜனாதிபதி, வடக்கு - கிழக்கு பகுதிகளில் வன்முறைகளை தடுக்கவும் சட்டம் ஒழுங்கை பேணவும் சகல கட்சிகளினதும் ஒத்துழைப்புடன் ஒரு பொதுவானசெயற்றிட்டம் வகுக்கப்பட்டு அதனை நடைமுறைப் படுத்தலாம் என்று ஆலோசனை வழங்கினார்.

இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கண்காணிப்புக்குழுவினர் அனுசரணை வழங்கலாம். அந்த செயற்றிட்டத்தை எதிர்காலத்தில் சகல கட்சிகளினதும் பொது இணக்கத்துடன் உடன்படிக்கையாக மாற்றுவதற்கு கண்காணிப்புக் குழு உதவலாம் என்றும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி கூட்டிய நேற்றைய மாநாட்டில் டக்ளஸ் தேவானந்தாவுடன் ஈபிடிபி. பிரமுகர்களான தவராசா, மகேஸ்வரி வேலாயுதம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை -

நேற்றைய மாநாட்டில் ஆலோசிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பிரதமருக்கு கடிதம் ஒன்றை ஜனாதிபதி அனுப்புவார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

பிரதமர் தலைமையிலான குழுவினர் ஒஸ்லோ புறப்படுவதற்கு முன்பாக இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்படும் என்றும் -

விடுதலைப் புலிகள் இனிமேல் ஜனநாயக நடைமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பார்கள் என்ற உறுதிமொழியை அவர்களிடமிருந்து பிரதமர் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று ஜனாதிபதி அந்தக் கடிதத்தில் கோருவார் எனவும் -

ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ-3-4)

### விளையாட்டால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளான்.

மாடு மேய்ப்பதற்காக வயல் வெளிக்கு இச்சிறுவன் சென்றதாகவும் -

அங்கு நிலத்தில் காணப்பட்ட 'வயர்' ஒன்றை பிடித்திழுத்தபோதே இந்த விபரீதம் ஏற்பட்டதாகவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

### புத்தளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு ஜும்மா பள்ளிவாசலில் இருந்து புறப்பட்ட முஸ்லிம்கள் ஐந்து சந்திப் பகுதிவரை சென்று அங்கு ஒன்றுதிரண்டு நின்று கோஷங்களை எழுப்பினர்.

பிற்பகல் 2 மணிவரை ஆர்ப்பாட்டம் செய்த பின்னர் அங்கிருந்து கலைந்துசென்றனர்.

நேற்றைய ஆர்ப்பாட்டப் பேரணியில் ஒலித்த கோஷங்களில் சிலவருமாறு:-

☆சிங்களக் காடையரை அடக்க அரசே நடவடிக்கை எடு!

☆நாம் எதற்கும் துணிந்தவர்கள்!

☆இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் யாழ்.மண்ணில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும்!

☆புத்தளத்தில் முஸ்லிம் அகதிகளின் குடிசைகள், பள்ளிவாசலை அழித்தது சிங்களக் காடையரே!

☆இந்த நாட்டில் முஸ்லிம்களுகபகுப் பாதுகாப்பு இல்லையா?

☆எமக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய வேலிகளே பயிரை மேயலாமா?

☆புத்தளம் முஸ்லிம்களுக்கு அரசு முழுப்பாதுகாப்பும் வழங்க வேண்டும்.

(ஐ-12-5)

### ஈ.பி.டி.பி.உறுப்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டி.பி. உறுப்பினர் புலோலிதெற்கு முருகையன் கோயிலடியைச் சேர்ந்தவர். அவரது பெயர் இராசரத்தினம் சத்தியேந்திரா. வயது 33. கட்சிப் பெயர் அரபாத். மனைவியின் பெயர் மீனாம் பிகை. அவருக்கு வயது 33.

ஈ.பி.டி.பியின் வடமராட்சி அலுவலகம் மந்திகையில் ஆரம்பிக்கப்பட்ட போது கட்சியில் இணைந்து பணியாற்றிவர் அரபாத்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ-173-139-8)

### ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டத் தலைவர் ஓலே புரொண்டம் நேற்றும் அங்கு வருகை தந்து போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடினார்.

தலைமையகம் அமைந்துள்ள பகுதியில் பெரும் எண்ணிக்கையான பொலீஸாரும் படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (ஐ-3-12-139-173)


**NEW SCIENCE CENTRE**
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
**A/L 2004**
Inorganic Chemistry & General மீட்டல்
Sat., Sun. 7-8 a.m.
*By :* அன்பழகன்
உயிரியல் மீட்டல்
Genetics
Sat., Sun. 11.30-12.30
உயிரியலிற்கான புள்ளிவிவரவியல்
Sat., Sun. 12.30 -1.30
*By :* தற்பரன்

IBMSIBMSIBMSIBMSIBMSIBMSIBMSIBMSIBMSIBMSIBMSIBMS
IBMS
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
23.11.2002
Diploma in Business Application (DBA)
Diploma in Information Technology (DIT)
DIT பாடத்திட்டத்தில் உள்ள Modules களை வேறேதும் கற்கை நெறியில் கற்ற மாணவர்களுக்கான Exemption மற்றும் அதற்கான கட்டணச்சலுகை விபரங்கள் அலுவலகத்தில்.
Jaffna Chankanai Nelliyady Chavakachcheri

O/L வணிகக்கல்வியும் கணக்கீடும்
கொழும்பு றோயல் கல்லூரி மாதிரி வினாத்தாள்
பெற்றுக்கொள்ளப்படும் இடங்கள்:
★ பூபாலசிங்கம் - யாழ்நகர்
★ ஸ்ரீலங்கா - யாழ்நகர்
★ தமிழ்பூங்கா - நெல்லியடி
★ பிள்ளையார் புத்தகசாலை - கிளிநொச்சி
★ கலையகம் கல்வி நிலையம் - ஆவரங்கால்
- S.R.J.
(10856)

மிகச் சொற்ப பிரதிகளே!
O/L 2002 Dec.
(5)பாடங்களின் முற்றிலும் எதிர்பார்க்கை வினாத்தாள்கள்
☛ யாழ்., வன்னியின் சகல புத்தகசாலைகளிலும்

இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்
இயற்கை மூலிகை மற்றும் யோகாசன சிகிச்சை மூலம் *ஆஸ்துமா, சலரோகம், மூல வியாதி(Piles), உடல்பருமன், முகப்பரு, இளநரை, தலைமுடி கொட்டுதல், தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும்* எவ்வித பக்கவிளைவுகளுமின்றி பரிபூரணமாக, குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.
ஆண்மைக் குறைவு, குழந்தைப் பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும், மருந்துகளும் வழங்கப்படும்.
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
**Dr.R.K.நவனீதன்** DYNS:SMP:NC
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
யாழ். உல்லாச பயணியர் விடுதி,
இல.54, மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் சந்தி அருகில்),
யாழ்ப்பாணம். செல்போன்:0777-491049
முகாம் நடைபெறும் நாள்கள் நவம்பர் 23, 24, 25ஆம் திகதிகள்
முந்துங்கள்! முகாம் முடிவுற மூன்று நாள்களே உள்ளன.
அடுத்தமுகாம் டிசெம்பர் 25 ஆம் திகதிக்கு மேல்.
(10857)


சுயமாக தொழில் செய்யுங்கள்

வீட்டில் இருந்து குடும்ப அங்கத்தினர் ஒன்று சேர்ந்து மிகக் குறைந்த முதலீட்டில் இயந்திரம் இல்லாமல் செய்யக்கூடிய நல்ல கைத்தொழில் ஸ்கிரீன் பிரிணடிங். இந்தத் தொழிலை கொழும்பில் பயின்று இன்று உயர்ந்த நிலையில் தொழில் செய்து வருகின்றனர். யாழ்நகரில் உள்ள தமிழ்மக்களுக்கும் இந்தக் கலைத் தொழிலைக் கற்றுக்கொடுக்க தென் தமிழகத்தில் இருந்து R.பரதன் (அச்சுக் கலை நிபுணர்) யாழ்.நகருக்கு வருகைதந்துள்ளார். இந்தத் தொழில் பற்றிய முழுவிவரம், இதன பயன்பற்றிய விளக்கம் தேவைப்படுவோர் இலவசமாக நேரில் வந்து சந்தித்து பின்பு பயிற்சியில் சேரலாம். பயிற்சி 3 நாள்கள் மட்டுமே. பயிற்சிக்கு பின்பு தொழில் தொடங்கலாம். சான்றிதழ் வழங்கப்படும். இந்தத் தொழில் செய்வதன் மூலம் பிளாஸ்டிக் பேனா, தகரம், துணிவகைகள், பேனர், பில்புக், நோட்டீஸ், போஸ்டர், திருமண அழைப்பிதழ் முதலியன பிரிணடிங் செய்யலாம். இந்த அரியவாய்ப்பை யாழ். நகர மக்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். பயிற்சியில் வயது வரம்பு இல்லை.
நேரில் தொடர்பு:
**CAREER.COM INSTITUTE**
79, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 0777-706334.
(10830)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.11.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மீளக்குடியமர்ந்துவரும்

# கொழும்புத்துறை மக்களுக்கு உரிய அடிப்படை வசதிகளை செய்து தருக

## மாநகர முதல்வரிடம் பொது அமைப்புக்கள் கோரிக்கை

அரியாலை,நவ.23

கொழும்புத்துறை பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துவரும் மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையமும், ஜெறலைனேர்ஸ் விளையாட்டுக் கழகமும் யாழ்.மாநகர முதல்வரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பாக மேற்படி அமைப்புக்கள் ஒன்றிணைந்து அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொழும்புத்துறை பிரதேசத்தில் தற்போது ஓரளவு இயல்புநிலை ஏற்பட்டு மக்கள் தமது இருப்பிடங்களில் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

எனவே, மேற்படி மக்களின் நன்மை கருதி பின்வரும் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

★ நீண்டகாலமாக புனரமைக்கப்படாதிருக்கும் விபுலானந்தர் வீதி, புங்கன்குளம் வீதி, சுவாமியார் வீதி, இலந்தைக்குளம் வீதி போன்றவற்றை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

★ எமது நிலையப் பாலர் பாடசாலையை உடனடியாக ஆரம்பிக்க வசதியாக அதற்குரிய, தளபாட கொள்வனவுக்கு நிதி உதவி வழங்குதல்.

★ இப்பகுதி வீதி, மதகு மற்றும் வெறும் காணிகளை துப்புரவு செய்தல். (எ-17)



அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைவர் லிங்கோ பெர்னாண்டோ அச்சுவேலி தென்னை நாற்று மேடையினை பார்வையிடுவதனையும் வலப்பக்கத்தில் அவரது ஆலோசகரும், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரும் இடப்பக்கத்தில் பிராந்திய முகாமையாளரும் காணப்படுகின்றனர். (ம)

யாழ்.குடாநாட்டில்

# செவ்வாயன்று மட்டும் 179.2 மி. மீற்றர் மழை

யாழ்ப்பாணம்,நவ.23

குடாநாட்டில் இந்த வருடத்தின் அதிகூடிய மழையாக கடந்த 19 ஆம் திகதி பெய்த 179.2 மி.மீ மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி வரை 127.2மி.மீ மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் -

அதே நேரத்தினுள், உயர் வெப்பநிலையாக 28 பாகை செல்சியஸும், குறைந்த வெப்பநிலையாக 22.8 பாகை செல்சியஸும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் ஆராய்ச்சி திணைக்களத்தின் யாழ். அலுவலகத் தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர் த.பிரதீபன் தெரிவித்தார்.

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் நேற்ற வரைக்கும் 1186.8 மி.மீ மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும்.

அதில் 552.2 மி.மீ மழை வீழ்ச்சி இந்த நவம்பரில் மட்டும் பதிவாகியது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-9)

# தனிச் சிங்களத்தில் முறைப்பாட்டுப் பிரதி

## மொழிபெயர்க்க அலையும் பொதுமக்கள்

வலி.மேற்கு,நவ.23

மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாட்டாளர்களின் முறைப்பாட்டுப் பிரதிகள் தனிச் சிங்களத்திலேயே எழுதப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. இவற்றை மொழி பெயர்த்து அதில் என்ன உள்ளது என்று அறிந்துகொள்வதற்கு பொதுமக்கள் அலையவேண்டியுள்ளதுடன் பெருமளவு பணத்தையும் செலவிட வேண்டியும் உள்ளது.

மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்கின்ற முறைப்பாட்டாளர்களின் முறைப்பாடுகள் அனைத்தும் தமிழில் இருந்து சிங்களத்துக்கு மொழி பெயர்க்கப்பட்டே பதிவேட்டில் பதிவுசெய்யப்படுகின்றன.

பின்னர் முறைப்பாட்டாளர்கள் வழக்குத் தாக்கல் செய்வதற்காக முறைப்பாட்டுப் பிரதியைக் கோரும் போது அவை தனிச் சிங்களத்திலேயே வழங்கப்படுகின்றன.

இப்பிரதியின் ஆங்கிலம் அல்லது தமிழ் மொழிபெயர்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் மொழிபெயர்ப்பாளர்களைத் தேடித்திரிய வேண்டியுள்ளது.

மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் என்றில்லை குடாநாட்டிலுள்ள அனைத்துப் பொலீஸ் நிலையங்களிலும் இத்தகைய நிலையே தொடர்வதாகப் பொதுமக்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய பொலீஸ் மா அதிபராக ஈ.ஆனந்தராஜா பதவியேற்றவுடன் நாட்டின் அனைத்துப் பொலீஸ் நிலையங்களிலும் தமிழில் முறைப்பாடுகளைப் பதிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், தமிழ்ப் பிரதேசங்களில் கூட அதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-175)

# மின்தடை தொடர்பாக மின்சாரசபை அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.23

அவசர திருத்த வேலைகள் காரணமாக பின்வரும் பகுதிகளில் குறிப்பிடப்படும் திகதிகளில் முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.மின்சார சபை அறிவித்துள்ளது.

மின்வெட்டு அமுலப்படுத்தப்படவுள்ள தினங்கள் மற்றும் இடங்கள் பற்றிய விவரம் வருமாறு:-

☆ இன்று சனிக்கிழமை - புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, வடமராட்சி.

☆ எதிர்வரும் 30ஆம் திகதி - காங்கேசன்துறை.

☆ அடுத்த மாதம் 7ஆம் திகதி - இணுவில், தாவடி, சுதுமலை, கொக்குவில், நாச்சிமார்கோயிலடி, கோம்பையன்மணல், ஆனைக்கோட்டை, நவாலி.

☆ அடுத்த மாதம் 14ஆம் திகதி - உரும்பிராய், கோண்டாவில், பொற்பதி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், யாழ்.மாநகர சபைப் பகுதி.

☆ அடுத்த மாதம் 21ஆம் திகதி - புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, வடமராட்சி, குளப்பிட்டி, ஆனைக்கோட்டை, நவாலி, கந்தரோடை, சண்டிலிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டைப் பகுதி, பண்டத்தரிப்பு, மூளாய், மருதனார்மடம். (எ-5)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,நவ.23

சலன சித்திர அமைப்பின் தென்மராட்சிக் கிளையின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள திரைப்படத் தொழில்நுட்ப பயிற்சிப் பட்டறையின் ஆரம்ப விழா நாளை காலை 9 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ)

## மினிபஸ் சேவை ஆரம்பம்

தென்மராட்சி,நவ.23

தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினர் 775 தட எண் மார்க்க மினிபஸ் சேவையினை ஆரம்பித்துள்ளனர்.

தினமும் கொடிகாமத்திலிருந்து சாவகச்சேரி கைதடி களகம்புளியடிச் சந்தி புத்தூர் ஊடாக சுன்னாகத்திற்கு சென்று அதே மார்க்கமாக கொடிகாமத்திற்கு சேவையிலீடுபடுமென சங்கத் தலைவர் மெ.அற்புதராசா தெரிவித்தார். (ஓ-117)

# கூட்டுறவு ஆணையாளர் மாநாடு இம்முறை யாழ்ப்பாணத்தில்!

அரியாலை,நவ.23

சமாதான சூழ்நிலையையடுத்து நாட்டிலுள்ள எட்டு மாகாணங்களின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள் கலந்துகொள்ளும் கூட்டுறவு மாநாடு இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு அடுத்த மாதம் 7ஆம் திகதி யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சுப்பிரமணிய சர்மா தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில், நாட்டின் ஏனைய ஏழு மாகாணங்களின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள் மற்றும் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொள்வர்.

இந்த மாநாட்டில் கூட்டுறவுத் துறையினர் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-17)

## வடமராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கு!

வடமராட்சி,நவ.23

வடமராட்சிப் பிரதேசத்தில் கடமைபுரியும் முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் சமூகமளிக்குமாறு விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல்துறை கேட்டுள்ளது.(ம-173)

## சிரார்த்ததினம்

யாழ்ப்பாணம்,நவ.23

சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஸ்தாபகர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசத்தின் 12ஆவது சிரார்த்த தினம் இன்று காலை 10.30 மணிக்கு மன்றத் தலைவர் ந.கந்தையா தலைமையில் யாழ்.ஸ்ரான்லி வீதியிலுள்ள மன்றக் காரியாலயத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் மன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-10)

உயர் பாதுகாப்பு வலயங்களில்

# மூடிக்கிடக்கும் இந்து ஆலயங்களை மீளத் திறக்க நடவடிக்கை எடுக்குக!

## இந்து சமயப் பேரவை பிரதமர் ரணிலிடம் கோரிக்கை

குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களில் பூசை வழிபாடுகள் இன்றி மூடிக்கிடக்கும் இந்து ஆலயங்களை மீளத் திறக்கவும், பூசை வழிபாடுகள் நிகழ்த்தவும் உரிய நடவடிக்கை எடுக்குக.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது யாழ்.இந்து சமயப் பேரவை.

'பாதுகாப்புக் காரணங்களால் பூட்டப்பட்ட ஆலயங்களை திறவுங்கள் இல்லையேல், சாத்வீக ரீதியான போராட்டங்களைத் தொடங்குவோம்' என்ற தலைப்பில் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போர் தொடங்கிய நாளிலிருந்து இற்றைநாள்வரை ஆயிரத்து இருநூற்று எழுபத்தைந்து ஆலயங்கள் பகுதியாக அல்லது முழுமையாக சேதமாக்கப்பட்டுள்ளன.

'யுத்தத்தைச் சாட்டாக வைத்து பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி, எமது மக்களின் ஆத்மீக உறைவிடங்களான ஆலயங்களுக்குச் சென்று வழிபடும் உரிமை முன்னைய அரசுகளால் மறுக்கப்பட்டு வந்துள்ளது.

தற்போது சமாதானத்துக்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படும் தங்கள் அரசு, எமது வழிபாட்டு உரிமைக்கு மதிப்பளித்து எமது வழிபாட்டு இடங்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றும் என்றே எதிர்பார்த்தோம். அந்த எதிர்பார்ப்பு நிறைவேறாது போனமை எமது நாட்டுக்கு ஏற்பட்ட தலைக்குறைவே.

இன்று அனைவரினதும் தெய்வீக பிரார்த்தனை காரணமாக சமாதானச் சூழ்நிலை ஒன்று உருவாகியுள்ளது. இச்சமாதானச் சூழ்நிலை உருவாகி ஏழு, எட்டு மாதங்கள் ஆகியும் ஆலயங்களிலும், ஆலய வளாகங்களிலும் இராணுவ முகாம்கள் அமைந்து காணப்படுகின்றன. இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்ட காரணத்தால், பல ஆலயங்கள் இருந்த இடமே தெரியாது அழிக்கப்பட்டும் உள்ளன. பல வரலாற்றுப் பெருமைமிக்க ஆலயங்களில் பூசைகள் உரிய முறையில் நடைபெறமுடியாதுள்ளது.

"இராணுவ நடவடிக்கையைச் சாட்டாக வைத்து, பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி போர் தொடங்கிய நாளிலிருந்து சமாதானம் மலர்ந்துவரும் இற்றைநாள்வரை பூட்டப்பட்டிருக்கும் நானூற்றி இருபத்திரண்டு ஆலயங்களை எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன் இலங்கை அரசாங்கம் வழிபாட்டுக்கு எதுவித தடையுமின்றி திறந்துவிட வேண்டும். அத்துடன் இப்பிரதேசத்தில் மக்களை தடையின்றி மீளக் குடியமர அனுமதிக்கவேண்டும். இதனை நிறைவேற்றாத பட்சத்தில் நாடளாவிய ரீதியில் ஆத்மீக ரீதியான எதிர்ப்பியக்கங்களை ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்படும்" - என்று அண்மையில் நாம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி, ஆளும் கட்சித் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், இந்தியப் பிரதமர், நோர்வே பிரதமர், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (எ)

# வாகனங்களுக்கு தரச் சான்றிதழ் வழங்க அமைச்சு நடவடிக்கை

## பொதுமக்கள் பாதிக்கப்படுவதால் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.23

நாட்டில் பயன்பாட்டில் உள்ள வாகனங்களைப் பரிசோதித்து ஒவ்வொரு வருடமும் அவற்றுக்குத் தரச் சான்றிதழ் வழங்கும் நடைமுறை அடுத்த ஆண்டு ஜூன் மாதம்முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

வாகனங்கள் வெளிவிடும் புகையால் பொதுமக்கள் பெருமளவில் பாதிப்படைவதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வாகனங்களில் இருந்து வெளியாகும் புகையால் முதியவர்களும், சிறுவர்களும் பாதிப்படைவது இலங்கையில் அதிகரித்துள்ளது. இதனால் வாகனங்கள் வெளிவிடும் புகையைப் பரிசீலித்து வாகனங்களுக்கான தரச் சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென விசேட 'கராஜ்'களை அமைக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் -

விசேட போக்குவரத்துச் சட்டம் இயற்றப்பட்டு அதன் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் உள்ள வாகனங்கள் பரிசீலிக்கப்படுவதுடன் அதிக புகையை வெளியிடும் பாவனைக்கு உதவாத வாகனங்கள் சேவையில் இருந்து விலக்கப்படும் எனவும் - அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-12)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

'மோட்டோ றோலா' அன்ரனா ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: S.K. துரைசிங்கம் (K.R), இல.770, பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தை.(10837)

தரமான Prima கோழிக் குஞ்சின விலை குறைக்கப்பட்டுள்ளது. Broiler 38/-, வெள்ளைப் பேடு 46/-, சிவப்புப்பேடு 50/-. முன்பதிவு செய்து 28-11-2002 வியாழக்கிழமை மாலை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10835)

Sony Hi-Fi Setup மூன்று சீடி, வி.சீ.டீ டபிள் கசெற், ரியூனர் உட்பட 4000 Watts பெட்டியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மாசிலாமணி, வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, (10880)

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (10640)

புறொயிலர் 1Kg-110/- சுத்தம் செய்தது 1kg - 170/- மற்றும் 11/2 மாதம் நிரம்பிய சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் (100 நாள்களில் முட்டையிடக்கூடியது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (10774)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (10843)

புறொயிலர் கல்பேட்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. 1கிலோ.100/- சுத்தம் செய்யப்பட்டது 1கிலோ 170/- தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P No. 3529, 2867 (10875)

## வீடு விற்பனைக்கு

குளக்கண்டி வீதி, கட்டப்பிராயில் இரண்டு பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடன் கூடிய கல்வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.பத்மநாதன் குளக்கண்டி வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (10872)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த, 32வயதுடைய, ரேவதி நட்சத்திரம், செவ்வாய்க் குற்றமற்ற, கிரகபாவம் 42 உடைய, பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்பு மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: விளம்பர இல. 1705, C/o உதயன். (10831)

றோமன் கத்தோலிக்க வேதம் B.Com. பட்டதாரி ஆசிரியர் அனுதாப ரீதியாக உதவிகள் இல்லாத விதவைப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறார். ஜாதகம் தேவை இல்லை. சீதனம் தேவை இல்லை. தொடர்பு: திருக்குமரன், மங்கள ஏஜென்ஸி, மகாலட்சுமி தேநீர் கடை அருகில், K.K.S. வீதி, கொக்குவில். (10749)

## திருமண சேவை

1971, ரோகிணி, செவ்வாய் 7, சவுதி மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகன் யாழ்ப்பாணத்தில் உள்ளார். தொடர்பு: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (10663)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பகிறாம் No.I புறொயிலர் குஞ்சுகள் இன்று (23-11-2002) சனிக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். பதிவு செய்தவர்கள் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (10852)

## கோழிநோய் தடுப்பு மருந்து

Gampura, Raniket மருந்துகள ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 8 மணிக்கும் CRD சளி மருந்து புதன்கிழமை காலையும் வழங்கப்படும். இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10547)

---

வடபிராந்திய சத்திய சாயி சேவா நிலைய இணைப்புக் குழுவின் இளைஞர் சபை நடத்தும் இலவசக் கருத்தரங்கு

**க.பொ.த. (சா/த) - 2002**

*இடம்:* ***திருநெல்வேலி சத்தியசாயி சேவா நிலையம்***
(யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு முன்புறம்)
*காலம்:* எதிர்வரும் 24,25,26 (ஞாயிறு, திங்கள், செவ்வாய்)
*நேரம்:* காலை 9 மணிமுதல் 12 மணிவரை.
*பாடங்கள்:* **ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம்**
*(தினமும் ஒரு பாடம்)*

பிரபல ஆசிரியர்களும், இளைஞர்களும் இணைந்து நடத்துவார்கள்.

*அனைத்து மாணவர்களும் பங்குபற்றிப் பயன்பெறவும்.*

(10874) - இளைஞர் சபை.

---

# யூபிலி வாழ்த்துக்கள்

எமது பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றும்

**அருட்சகோதரி அருளம்மா மத்தேசுப்பிள்ளை**

அவர்கள் இறைபணி வாழ்வில் இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு பெறும் இன்றைய நன்னாளில் எமது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைவதுடன் அவரது பணி சிறக்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/சென்.மேரிஸ் வித்தியாலயம்.

(10878)

---

# மணிவிழா வாழ்த்து



உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையின் பழைய மாணவரும், திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையின் உப அதிபருமான

**திரு.கனகசபை சுந்தரகாந்தன்**

அவர்கள்

மணிவிழாக்காணுகின்ற செய்தி அறிந்து யாம் பெரிதும் மகிழுகின்றோம். அன்னவரது ஆசிரிய சேவையை மிகவும் பாராட்டுகின்றோம். திரு.சுந்தரகாந்தன் அவர்களது அரியசேவை தொடர்ந்தும் நாட்டுக்குக் கிடைக்க அருளும் வண்ணம் கற்பக விநாயகர் பொற்பாதங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

*உரும்பிராய்.* (10353)
உரும்பிராய் வடக்கு
கிராம முன்னேற்றச் சங்கம்

---

# கல்வி ஆண்டு 2003இல்

கோண்டாவிலில்.....

மாணவ உலகிற்கு ஒரு வரப்பிரசாதம்

## கோண்டாவில் கல்வி நிலையம்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**தரம் 03 முதல் O/L வரை**

**டிசம்பர் 01 இல் ஆரம்பம்**

தரமான ஆசிரியர்களின் ஒழுங்கான போதனைகள்.
கோண்டாவில்வாழ் மக்கள் பலரின் வேண்டுகோளுக்கு இணங்க உங்கள் ஆசிரியர்கள்
ஞான.திருகேதீஸ்வரன், இரா.அருட்செல்வம்
ஆகியோரின் வழிநடத்தலில் ஆரம்பமாகிறது.

(சி-25021) - *நிர்வாகி.*

---

# றிச்சாட் அப்பியாசப் புத்தகம்

**[றிசட் அப்பியாசப் புத்தகம்]**

✱ றிச்சாட் றேடிங் கம்பனி ஸ்தாபனத்தார்

✱ **தற்போது யாழ்.குடாநாட்டில்**

✱ **உங்களைச் சந்திக்கின்றார்கள்!**

**குறைந்த விலை** **நிறைந்த தரம்**




மொத்த வியாபாரிகளே!

இதோ உங்கள் கைகளுக்கு

**40 பக்க அப்பியாசப் புத்தகம் 100 இற்கு 4.35**

**80 பக்க அப்பியாசப் புத்தகம் 100 இற்கு 8.50**

**120, 160, 200, 240, 320, 400 பக்கங்கள் கொண்ட அப்பியாசப் புத்தகங்களும் குறைவான விலைகளில் விநியோகிக்கப்படும்.**

- இலங்கை வர்ணப்பட அப்பியாசக் கொப்பிகளின் முன்னோடிகள்.
- உலகப் புகழ் வாய்ந்த **(WALT DISNEY)** நிறுவனத்தின் உரிமத்தைப் பெற்ற நிறுவனம்.
- உலகப் புகழ்வாய்ந்த **(WALT DISNEY)** அப்பியாசப் புத்தகங்கள்.
- மேலும் பல வகை.
- 11 வகையான சந்தைப்படுத்தும் உயர் தர அப்பியாசப் புத்தகங்கள்.
- குறைந்த விலையில் உயர்ந்த தரம்.
- 800 வகையான பொருள்களின் உற்பத்தியாளரும் ஏற்றுமதியாளரும்.

**றிச்சாட் கம்பனி விற்பனையாளர் உங்களைச் சந்திப்பதற்காக தற்போது பொருள்களுடன் வாகனம் மூலம் வந்துள்ளார்கள்.**

*இரண்டு வாரங்களில் எமது உற்பத்திகளை வாங்குவோருக்கு பரிசு வழங்கும் திட்டம் ஆரம்பமாகும். அப்போது விவரங்களையும் கூப்பன்களையும் விநியோகஸ்தர்களிடம் பெறலாம்.*

**யாழ் விநியோகஸ்தர்:**

**S.J. & B றேட் ஏஜென்சி**
இல. 39, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 2549

**றிச்சாட் றேடிங் கம்பனி**
64, பெறக்கும்பா வீதி, குருநாகல்.
தொலைபேசி: 0372 2547, 33298/9
தொலைநகல்: 074 690701

(10822)

# நெடுந்தீவில் நடக்கும் சம்பவங்கள் சமாதான சூழலை பாதிக்கலாகாது!

## கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மகஜர்

யாழ்ப்பாணம்,நவ.23

கடந்த இரண்டு மூன்று தினங்களாக நெடுந்தீவில் இடம்பெற்றதாகச்சொல்லப்படும் சம்பவங்களையிட்டு நாம் பெரிதும் குழப்பமடைந்துள்ளோம் என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

சட்ட ரீதியான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் எவரையும், யாரும் தடுப்பதற்கில்லை. எவ்வாறாயினும் அந்நடவடிக்கைகள் மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்காத வகையில் இருப்பதை அவர்கள் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். நெடுந்தீவு பிரதேசத்தில் உள்ள மக்களின் உடன்பாட்டுடனும் ஒத்துழைப்புடனும்தான் அரசியல் நடவடிக்கைகள் அமையவேண்டும் என்பதை எல்லோரும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

- இவ்வாறு யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் கண்காணிப்புக் குழுவின் யாழ்மாவட்ட பொறுப்பதிகாரிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சமாதானம், ஒழுங்கு என்பவை நிலவுவதைத் தாமே உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டிய - சட்டத்தை அமுல்படுத்தும் - பிரதிநிதிகளின் செயற்பாடுகளினால் பொதுமக்கள் மூவர் காயமுற்றனர் என்ற தகவல் கவனத்தை ஈர்த்துள்ளது.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமாதான முன்முயற்சிகள் மற்றும் ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம் அமுல் செய்யப்படுதல் ஆகியவற்றில் இந்த வகையான நிகழ்வுகள் இடையூறு விளைவித்துவிடுமோ என அஞ்சுகிறோம்.

சமாதானத்தை விரும்பும் எங்களுக்கு இது மிக்க வேதனையை அளிக்கிறது என்பதைத் தாங்கள் புரிந்துகொள்வீர்கள் என நம்புகிறோம்.

எனவே, நெடுந்தீவுச் சம்பவங்களையிட்டு விசாரணை மேற்கொள்வதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதோடு நிலவும் பதற்றத்தை நீக்குவதற்கும் இனிமேல் இந்த வித அசம்பாவிதங்கள் மீண்டும் நிகழ்வதைத் தவிர்ப்பதற்கும் அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமெனத் தங்களை வேண்டிக்கொள்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த மகஜரின் பிரதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன. (ஐ-17)

### தேசிய மட்டப் போட்டியில் உடுத்துறை மகாவித்தியாலய மாணவிகளுக்கு பதக்கம்

மருதங்கேணியைச் சேர்ந்த இரு மாணவிகள் குருநாகலில் நடைபெற்ற தேசிய மட்ட சமூகக் கல்வித் தினப் போட்டியில் பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

உடுத்துறை மகா வித்தியாலய மாணவிகளான குணநாயகம் திருமகள், கணபதிப்பிள்ளை சாந்தினி ஆகியோரே இவ்வாறு இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்று பரிசினைப் பெற்றுள்ளனர். (எ-182)

# புலிகள் மீதான தடையை அடுத்த வருடம் அமெ. நீக்கும்?

லண்டன்,நவ.23

அமெரிக்காவில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீது விதிக்கப்பட்டுள்ள தடை அடுத்த வருடம் ஒக்ரோபர் மாதம் நீக்கப்படும் சாத்தியம் உள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரக பேச்சாளரான புரூஸ் லோக்கொவ் கூறியிருப்பதாக சர்வதேச செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

'பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலின்படி விடுதலைப் புலிகள் மீது அமெரிக்கா விதித்திருக்கும் தடை அடுத்த வருடம் ஒக்ரோபர் மாதத்துடன் காலாவதியாகின்றது என்றும் -

அதன்பின்னர் அத்தடையை நீடிக்கும் சாத்தியம் இல்லை என்றும் - அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

விடுதலைப் புலிகள மீதான தடையை நீக்குவது என்று அமெரிக்காவும் பிரிட்டனும் முடிவு செய்துள்ளதால் இந்தியா கலக்கமடைந்துள்ளதாகவும் -

அதன் காரணமாக ஒஸ்லோ மாநாட்டில் பங்குபற்ற இந்தியா பின்னடிக்கின்றது என்றும் - ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

# மருதங்கேணிப் பகுதி மக்கள் மருத்துவ வசதியின்றி அவதி!

வடமராட்சி கிழக்கு,நவ.23

மருதங்கேணிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து 7 மாதங்களாகியும்,அப்பகுதி மக்களுக்கு இன்னமும் வைத்திய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை எனக் கூறப்பட்டது.

சேதமடைந்துள்ள மருதங்கேணி அரசின் கிராமிய வைத்தியசாலையினை தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கவைக்க நடவடிக்கை எடுப்பதாக இரண்டு மாதங்களுக்கு முன்னர் மருதங்கேணியில் அரச உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபோதிலும், இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதற்கிடையில், வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழு உடனடியாக வைத்தியசாலையை ஆரம்பித்து, அப்பகுதி மக்களின் மருத்துவத் தேவையைச் சீர்செய்யுமாறு யாழ். மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கோரியுள்ளது. (எ-182)



ஏழைகள் மற்றும் ஆதரவற்றோருக்கு உதவிகளை வழங்கி வரும் யாகப்பர் ஆலய வின்சென் டி போல் சபையின் பெண்கள் பிரிவுக்கு கனடாவில் இயங்கிவரும் அதே சபையினைச் சேர்ந்தவர்கள் அண்மையில் 500 கனேடிய டொலர் நிதியை வழங்கியிருந்தனர். அந்த நிதியை சபையின் பங்குத் தந்தை அருட்திரு. அ. ஜெயசேகரம் அடிகள் சபையின் பொருளாளர் திருமதி அஞ்சலா பேர்மனஸிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் சபையின் அங்கத்தவர்களும் காணப்படுகின்றனர். (ம)

# திருகோணமலையில் இடம்பெயர்ந்த குடும்பங்களை குடியமர்த்த முடிவு

## பாதுகாப்பு உபகுழுக்கூட்டத்தில் தீர்மானம்

திருகோணமலை,நவ.23

திருகோணமலை மாவட்டத்தில் கொக்கிளாய், தென்னைமரவாவடி, கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பிரதேசங்களிலிருந்து வெளியேறிய தமிழ்மக்களை மீளக் குடியமர்த்துவதென திருகோணமலை மாவட்ட பாதுகாப்பு உப குழு முடிவு செய்துள்ளது.

திருகோணமலையில் உள்ள யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற உப குழுக் கூட்டத்தில் பங்குபற்றிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் இத்தகவலை வெளியிட்டார்.


இக்கூட்டத்தில் புலிகளின் சார்பில் திலக், ராஜேஸ், நீதன், சிவகுமார் ஆகியோரும் -

படையினர் தரப்பில் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, ரியர் அட்மிரல் வீரசேகர, ரியர் அட்மிரல் ரட்ண கீர்த்தி, பிரிகேடியர் ஜோன் செனவீர, லெப்டினன்ட் கேணல் ஜெயசேகர, குறூப் கப்டன் குணதிலக, குறூப் கப்டன் புளத் சிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பிரட்றிக் கோட்டைக்கு அருகில் உள்ள பாவநாசம் நீர் தேக்க பகுதியில் உள்ள படையினரையும் விலக்க இராணுவத் தரப்பு இணக்கம் தெரிவித்தது என்றும் திலக் சொன்னார்.

எதிர்பார்த்த முடிவுகள் எட்டப்படாவிட்டாலும் பல விடயங்களில் இணக்கம் ஏற்பட்டது என்றும் கூறினார்.

திருமலைக் கடற்பகுதியில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வினைக் காண்பதற்காக கடற்படை அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் சொன்னார். (ஐ-3)



நேற்றுமுன்தினம் திருமலையில் நடந்த பாதுகாப்பு உப குழுவின் கூட்டத்தில் அரச - புலிகளின் பிரதிநிதிகள்.

# கட்சிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்

## ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி), புளொட் அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.23

நெடுந்தீவிலும் அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலும் ஈ.பி.டி.பி. அமைப்புக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மாற்று அரசியல் கருத்துக்கொண்டோருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தலாகும் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர் அணி) தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளதாவது:-

உலகளாவிய அளவில் ஜனநாயகம் தொடர்பாகவும், மனித உரிமை தொடர்பாகவும் உள்ள சட்ட திட்டங்கள், கருத்துக்கள் ஜனநாயக நாடுகளின் நடைமுறைகளுக்கு விரோதமானதாகும். எமது பிரதேசங்களில் மாற்று அரசியல் ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள், மாற்றுக் கருத்துக் கொண்ட புத்திஜீவிகள், பொதுமக்கள் கொலைசெய்யப்படுவதும் அச்சுறுத்தப்படுவதும், குரல்வளை நெரிக்கப்படுவதும் ஒரு தொடர் சங்கிலிச் செயற்பாடாக நடைபெற்றுவருகிறது.

சுயநிர்ணய உரிமை என்பது எவ்வாறு ஒரு தேசிய இனம் தனது தலைவிதியைத் தானே நிர்ணயிக்கும் உரிமையாகுமோ? அவ்வாறே தமது பிரதிநிதிகளை, தமது தலைவர்களைத் தெரிவுசெய்யும் உரிமையும் அந்தத் தேசிய இனத்திற்குரியது.

மக்கள் விரும்பியவாறு தெரிவு மேற்கொள்வதற்கான பல்வேறு அரசியல் ஸ்தாபனங்களின் இருப்பு வடக்கு - கிழக்கில் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

ஒரு கட்சிக்கு மக்களின் ஆதரவு இருக்கிறதோ இல்லையோ அதன் செயற்பாட்டை முடக்க ஒருவருக்கும் அதிகாரம் கிடையாது. தற்போது மக்கள் என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பின்னாலிருந்து நிர்ப்பந்தம் மேற்கொள்ளப்படாமல் தன்னியல்பாக நடக்கவில்லை.

சமாதானம், தமிழ் மக்களின் அபிலாசை என்பன தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகம், மனித உரிமை என்பவற்றையும் உள்ளடக்கியதே. ஒவ்வொரு தனிமனிதனதும் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். இங்கு சமூக நிறுவனங்கள் தவறான வழியில் செயற்பட நிர்ப்பந்திக்கப்படுகின்றன. உலகம் ஒரு கிராமமாக மாறிக்கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் சமூகத்தின் பல்வேறு தரப்பினரதும் உரிமைகள் வலியுறுத்தப்படும் காலகட்டத்தில் இத்தகைய நிலைமைகளை சர்வதேச சமூகம் அனுமதிக்கமுடியாதென்பதை தயவுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். வடக்கு - கிழக்கில் வெவ்வேறு சமூகங்களின் இருப்பு, வெவ்வேறு அரசியல் ஸ்தாபனங்களின் இருப்பு, அவற்றின் பாதுகாப்பு, அவற்றின் செயற்படும் உரிமை பாதுகாக்கப்படவேண்டும் என்பது பிரதானமானதாகும் - என்றுள்ளது.

இதேவேளை - புளொட் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்மக்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சியான ஈ.பி.டி.பி. ஜனநாயக கட்சியினர் நெடுந்தீவில் தமது அரசியல் செயற்பாட்டை தொடருவதற்காக தமது நெடுந்தீவு அரசியல் அலுவலகம் சென்றுள்ளனர். மக்கள் ஆணையிடப்பட்டு கையளிக்கப்பட்ட பிரதேச சபை நிர்வாகம், தங்களிடமுள்ள நிலையில் மக்கள் போராட்டமென்ற போர்வையில் - ஜனநாயக மறுப்பு தொடர்ந்துகொண்டிருப்பதை இன்றைய சூழலில் மிகவும் அவதானமாக சகல ஜனநாயக அமைப்புக்களும் நோக்கவேண்டும்.

தொடர்ந்தும், சமாதானத்தை நிலைநிறுத்துமுகமாக அரசு - புலிகள் இணைந்த மாநாடுகள் நடந்த வண்ணமுள்ளன. தாய்லாந்தில் நடைபெற்ற பேச்சுக்களில் வடக்கு - கிழக்கில் சகல அரசியல் கட்சிகளும் தங்களது அரசியல் பணியை தொடருவதற்கு எந்த இடையூறும் தங்களால் ஏற்படுத்தப்படமாட்டாது எனப் புலிகள் தங்களது ஜனநாயகப் போக்கை வெளிக்காட்டிய பின்னரும், இவ்வாறான மாற்று அரசியல் கருத்து - மாற்று அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள் தடுக்கப்படுவது ஆரோக்கியமான ஜனநாயகமாகக் கொள்ளமுடியாது. ஒன்றுபட்ட தேசத்தில் எமது இனத்தின் உரிமை கேட்டு அதற்கு இசைவான போக்கில் அரசியல் முன்னெடுப்புக்கள் நடைபெறும் இக்காலகட்டத்தில், ஓர் அரசியல் கட்சியின் செயற்பாட்டை தடுக்க வேண்டியதில்லை.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உட்பட சகல அரசியல் கட்சிகளினதும் மக்கள் சேவைக்கான உரிமைகள் மறுக்கப்படுவதை கல்விமான்கள், புத்திஜீவிகள், மனித உரிமைகளுக்கான அமைப்புகள் உள்ளிட்ட சகலரும் கவனத்திலெடுத்து சரியான நிலைப்பாட்டை வலியுறுத்த புளொட் அமைப்பினராகிய நாம் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (ஐ-எ-3)

# மாவீரர்களின் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வுகள்

கைதடி,நவ.23

மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் குடாநாட்டில் இடம்பெற்றுவருகின்றன.

கைதடி வளர்மதி சனசமூக நிலையமும், கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையமும் இணைந்து தமது பகுதிக்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கவுள்ளன.

இதற்கான நிகழ்வு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதேபோல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்கு கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையமும், கைதடி பேற்று குமரன் சனசமூக நிலையமும் இணைந்து யாழ். கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் தமது பகுதிக்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

இதேபோல ஏனைய சனசமூக நிலையங்களும் இந்த மாவீரர் தினவிழாவையொட்டி இத்தகைய கௌரவிப்பு விழாக்களை ஏற்பாடு செய்துள்ளன.

மேலும் சனசமூக நிலையங்கள் மாவீரர் வாரத்தை முன்னிட்டு சிரமதானப் பணிகள் உட்பட பல பொதுப் பணிகளை ஆற்ற இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது (ஐ-75)




முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்

516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics


## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

### சகல பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கும், விசேட பொதுச் சபைக் கூட்டம்

30.11.2002ஆம் திகதி நடைபெற இருந்த எமது சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. இது தொடர்பான கடிதம் தனித்தனியாக அனுப்பி வைக்கப்படுகின்றது என்பதனையும் கூட்டத்திற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

தலைவர் (சி-25028) செயலாளர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மனம் மகிழ 20 - 07 - 1951



மனம் நெகிழ 24 - 10 - 2002

### அமரர் கந்தையா வதனராசா (வதனா)

அன்புடனும், பண்புடனும் வாழ்ந்து எங்களை அரவணைத்த தயாள குணங்கொண்ட அமரர் கந்தையா வதனராசா அவர்கள் இறைபதம் அடைந்து 31ஆம் நாளாகிய இன்று அன்னாரை நினைத்து அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து இறைவனை வணங்குகின்றோம்.

அன்னாரின் திடீர் மறைவு கேட்டு அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், வந்து ஆறுதல்களையும், உதவிகளையும் செய்த சகலருக்கும் துயரின் மத்தியிலும் நன்றியைத் தெரிவிப்பதோடு 23.11.2002 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்குபற்றி, தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அராலி வீதி,
சங்கானை. (10888) குடும்பத்தினர்.

உ

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

துன்னாலை வடக்கு, புலோலி

### திருப்பாவை ஓதுதற்போட்டி

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் அறங்காவலர் சபை திருப்பாவை ஓதுதற் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

அதன் விபரங்கள்:

1. கீழ்ப்பிரிவு 6ஆம், 7ஆம் தர மாணவர்கள்.
   மத்திய பிரிவு 8ஆம், 9ஆம் தர மாணவர்கள்.
   மேற்பிரிவு 10ஆம், 11ஆம் தர மாணவர்கள்.
2. திருப்பாவை முதற் பத்துப்பாடல்கள் இசையுடன் பாடுதல் வேண்டும்.
3. விண்ணப்பங்கள் பாடசாலை அதிபர் / வகுப்பாசிரியர்கள் சிபாரிசு செய்தல் வேண்டும்.
4. போட்டித் தினம்: 19.12.2002 வியாழன் காலை 10.00மணி
5. விண்ணப்ப முடிவு திகதி: 18.12.2002

(10881)

துன்னாலை வடக்கு, புலோலி. அறங்காவலர் சபை.

## கண்ணீர் அஞ்சலி

22ஆம் திகதி பத்தாம் பக்கத்தில் வந்த அஞ்சலியில் திருமதி அழகு சுப்பிரமணியம் என்பதற்குப் பதிலாக அழகரட்ணம் என்ற பெயர் பிரசுரிக்கப்பட்டுவிட்டது. அதனைத் திருத்தி வாசிக்கவும்.

அதிபர், ஆசிரியர்குழாம்,
(10884) யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## செயலமர்வு பிற்போடப்பட்டது

இந்துக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை காலை நடைபெறவிருந்த செயல்முறைத்திறன் பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று நடைபெறமாட்டாது. பிறிதொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சலன சித்திர அமைப்பின் தேசிய கலை எழுச்சி திட்டம்

யாழ்ப்பாணம்,நவ.23

ஆக்கிரமிப்புக் கலைகளுக்கு எதிராகத் தேசிய கலை எழுச்சியை ஏற்படுத்தும் நோக்குடனும் கலாசார சீரழிவுக்கெதிராக சமூக விழிப்புணர்ச்சியை உருவாக்கும் நோக்குடனும் சலன சித்திரம் அமைப்பு 'ஊருக்கு ஊர்' என்ற தேசிய கலை எழுச்சித் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

பேரினவாதம் பேசுவோரைத் தோற்கடித்து நிரந்தர சமாதானத் துக்கூடாக தமிழ்த் தேசிய விடுதலையை வென்றெடுக்கும் வகையில் யாழ்ப்பாண மக்களிடமிருந்து இரண்டு லட்சம் கையெழுத்துக்களைத் திரட்டும் பணியையும் இவ் அமைப்பினர் ஆரம்பித்துள்ளனர் எனக் கூறப்பட்டது. (ம-9)

## கிராய்க்குளம் அடுத்த ஆண்டில் ஆழமாக்கப்படும்

சண்டிலிப்பாய்,நவ.23

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனப் பிரிவிலுள்ள கிராய்க் குளம், அட்டகிரிக்குளம் ஆகியவற்றை அடுத்த ஆண்டில் ஆழமாக்கி புனரமைப்பு செய்வதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக இக்குளங்களின் சுற்றாடல்களிலுள்ள பயனாளிகளின் பெயர் விவரங்கள், நெற்செய்கை பண்ணப்பட்டுவரும் நெற்காணிகளின் பரப்பளவு, மேட்டுநில மரக்கறிச் செய்கை பண்ணப்படும் காணிகளின் பரப்பளவு ஆகிய விவரங்களைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்திடம் கடிதமூலம் கேட்டுள்ளார். (எ-135)

## சாதாரண தர பரீட்சைகுறித்த அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.23

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ.(சா.த) பரீட்சை சம்பந்தமான அறிவுறுத்தல் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் கல்விக் கோட்டம் தவிர்ந்த யாழ்.வலயம், தீவக வலயம், தென்மராட்சி வலயம் மற்றும் பளைக்கோட்டம் ஆகியவற்றில் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடவுள்ள இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள் பரீட்சை மேற்பார்வையாளர்கள் மற்றும் நிரந்தர நோக்குநர்கள் ஆகியோர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (ம-5)

## எழுதுமட்டுவாழ் பிள்ளையார் ஆலயத்தில் கார்த்திகைப் பூசை

தென்மராட்சி,நவ.23

எழுதுமட்டுவாழ் தெற்கு பெரிய கேணிப் பிள்ளையார் ஆலயத்தில் கார்த்திகை தீபப்பூசை கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இடம்பெயர்வின் பின்னர் சுமார் இரண்டரை வருடங்களின் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ நாகேஸ்வரக் குருக்கள், கிராம அலுவலர் வ.வேலுமுருகு, ஆலய பரிபாலன சபைத் தலைவர் கோ.வீரகத்திப்பிள்ளை ஆகியோரை 55ஆவது படைப்பிரிவு இராணுவத்தினர் ஆலயத்துக்கு அழைத்துச் சென்றனர்.

ஆலயப் பகுதி துப்புரவு செய்யப்பட்டு திருக்கார்த்திகைத் தீபம் ஏற்றப்பட்டது. ஆலய சுற்றாடலில் உள்ள மிதிவெடிகள், கண்ணிவெடிகள் ஆகியவற்றை அப்புறப்படுத்திவிட்டு இன்னும் இரண்டு வாரங்களில் பூசை வழிபாடுகள்செய்ய அனுமதிப்பதாக படை அதிகாரிகள் தெரிவித்ததாக ஆலய பரிபாலன சபையினர் தரப்பில் கூறப்பட்டது. (எ-117)

## தொழிலாளர் தேவை

1) மேசன்(Masons)
2) தச்சுத் தொழிலாளர்(Carpenters)
3) மின் இணைப்பாளர்(Electricians)

தகுதியானவர்கள் உடன் நேரில் வரவும்.

யூரோவில்,
866, பருத்தித்துறை வீதி,
(10886) நல்லூர், யாழ்ப்பாணம்.

## துயர் பகிர்வு

ROTARACT CLUB



யாழ்.ரோட்டறிக்கழக முத்த தலைவர்
Rtn. ஈ.சரவணபவன்
அவர்களின் அன்பு மைத்துனரும்,
Ann.யசோதை சரவணபவன்
இந்நாள் தலைவர்
Rtn. ந.வித்தியாதரன்
அவர்களின் பாசமிகு அண்ணா

### நடேசபிள்ளை ஸ்ரீதரன்

லண்டனில் காலமான செய்திகேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளோம். அன்பு அண்ணா, ஆசை மைத்துனன் உங்கள் மத்தியில் இப்போதில்லாவிடினும், அவரது பணிகளை தொடர்வதற்கு உங்களை அர்ப்பணித்துச் சென்றுள்ளார் என்பதையிட்டு சிறிது ஆறுதல் கொள்வீராக!

(சி-25027) -சுன்னாகம் றோட்டரக் கழகத்தினர்.

## துயர் பகிர்கின்றோம்

'உதயன்' நிர்வாகி திரு.ஈ.சரவணபவன், 'உதயன்' ஆசிரியர் திரு.ந.வித்தியாதரன் ஆகியோருக்கு உறுதுணையாகவும், அவர்களது குடும்பத்தின் விளக்காகவும், சிறந்த விளையாட்டு வீரனாகவும் திகழ்ந்த



### அமரர் நடேசபிள்ளை ஸ்ரீதரன்

அவர்களின் மறைவால் துயர் அடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபம். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சிறி டிஜிற்றல் கலர் லாப்,
கொனிகா கலர் லாப்
இல.14, ஸ்ரீ வேங்கடேசன் வீதி,
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.
T.P.: 2223493
(சி-25027) HOTLINE 0777730567

## 31ஆவது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 03 - 01 - 1949



ஆண்டவன் அடியில் 24 - 10 - 2002

### அமரர் குலநாயகம் குலேந்திரன்

(சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)

எங்கள் குலம் வாழ
ஒளிர்ந்த குல விளக்கே!
சொல்லாமல் கொள்ளாமல்
எமைவிட்டுச் சடுதியிலே போனதெங்கே?
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவலைகள்
எங்களை விட்டு நீங்காது!

அன்னாரின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (23.11.2002) சனிக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வுகளில் கலந்து மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயனார் கோயிலடி,
சண்டிலிப்பாய். (10879)

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.